விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 181 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 03 திங்கட்கிழமை (17.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## சமஷ்டி அதிகாரங்கள் தமிழர்களுக்கு வேண்டும்

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(திருகோணமலை)

பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய அடிப்படையில் இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்சமான அளவில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என தமிழரசுக் கட்சியின் 15

## மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

### மன்னார் மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் ஜனாதிபதி ரணில்



02

# பசுமை ஆற்றலை உற்பத்தி செய்வதில் வடக்கு விசேட ஆற்றல் கொண்டது

### மன்னாரில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(மன்னார்)

**வட மாகாணமானது பசுமை ஆற்றலை உற்பத்தி செய்வதில் விசேட ஆற்றலைக் கொண்டுள்ளது என மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மன்னார் மாவட்டம் இழந்த அபிவிருத்தியை மீண்டும் பெற்றுக் கொடுத்து இந்த ஆண்டு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

எதிர்வரும் ஐந்து தசாப்தங்களில் மாறி வரும் கால நிலைக்கு ஏற்ப இலங்கையில் அமுல்படுத்தக்கூடிய தீர்வுகளை காண வேண்டியதன் அவசியத்தையும் விளக்கிய ஜனாதிபதி, அடுத்த ஐம்பது வருடங்களில் 15

## இலங்கை வரும் ஜெய்சங்கர் சம்பந்தனுடன் கலந்துரையாடுவார்

(கொழும்பு)

இந்தியாவில் மீண்டும் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றுள்ள கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக எதிர்வரும் 02

### எதிராளிகளை ஒரு நிலைப்பாடாகப் பதிவு செய்து

## தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கை முடிவுறுத்தத் தீர்மானம் - சுமந்திரன்

(வவுனியா)

தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கில் எதிராளிகள் அனைவரது மறுமொழியையும் ஒருநிலைப்பாடாக பதிவு செய்து வழக்கை முடிவுறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். 02



## கிளிநொச்சியில் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் தீ விபத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் எரி 15

## சிறுவர்களிடையே பரவும் இன்ஃபுளுவென்சா வைரஸ்

### சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

இன்ஃபுளுவென்சா வைரஸ் தற்போது சிறுவர்களிடையே பரவி வருவதாக சுகாதார திணைக்களம் எச்சரித்துள்ளது.

இந்த வைரஸ் சுவாசக் குழாயைப் பாதிப்பதன் காரணமாக காய்ச்சல், தொண்டை வலி, உடல் வலி, தலைவலி, இருமல், சோர்வு போன்ற அறிகுறிகள் சிறுவர்களிடையே காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிகுறி 15

## தொல்புரத்தில் மயங்கி விழுந்த மாணவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தொல்புரத்தில் வீதியில் மயங்கி விழுந்த மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தொல்புரத்தைச் சேர்ந்த தொல்புரம் 02

## போதையற்ற சமூகத்தை உருவாக்க வலியுறுத்தி

### கிளிநொச்சியில் கவனயீர்ப்பு




02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவர் ஜெயகுலராஜா முல்லையில் காலமானார்



ஈழவிடுதலை போராட்ட காலங்களில் எண்ணிலடங்கா சேவையாற்றிய மருத்துவர் ஜெயகுலராஜா நேற்று மாஞ்சோலை வைத்தியசாலையில் காலமானார்.

தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் காயமடைந்த சீலன், குமரப்பா, புலேந்திரன் போன்றவர்களுக்கு சிகிச்சையளித்ததற்காக கைது செய்யப்பட்டு (1983) வெலிகடை சிறையில் குட்டிமணி, தங்கத்துரை, வணபிதா சிங்கராசா, மற்றும் விரிவுரையாளர் நித்தியானந்தன் போன்றவர்களுடன்இருந்தவரும்பின்மட்டக்களப்பு சிறையுடைப்பில் தப்பி இந்தியா சென்று விடுதலைப் புலிகளின் TRO அமைப்பின் தலைமைப் பொறுப்பை வகித்தவரும் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், யோகி போன்றவர்களுடன் உடனிருந்து பணியாற்றியவரும் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய பொறுப்பதிகாரியாகபணியாற்றியவரும் ஆவார். (ம-7,10)

## மயங்கி...

விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவனான தவராசா கோபிக்குமரன் என்ற 16 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த மாணவன் அவரது நண்பருடன் நேற்று மதியம் கடைக்கு சென்று உள்ளார். இதன் போது சுழிபுரம் சந்திக்கு அருகாமையில் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த மாணவனை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

குறித்த மாணவனுக்கு இதய வால்வில் ஏற்பட்ட சுருக்கம் காரணமாகவே இந்த மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (ம-7,10)

## மன்னார்...

மன்னார் மாவட்டத்திற்கான அபிவிருத்தி இலக்குகளை உரியமுறையில் அடைவதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட விசேட அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று நடைபெற்ற போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று கூட்டம் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் அவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், முப்படையினர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள இயற்கை வளங்களை பயன்படுத்தி எதிர்வரும் 05 ஆண்டுகளுக்குள் துரித அபிவிருத்தியை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மன்னார்மாவட்ட அபிவிருத்திக்காக ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் இதன் போது நன்றிகளை தெரிவித்தார். (ம-7,10)

## இலங்கை...

20 ஆம் திகதி இலங்கைக்கு வருகின்றார்.

இந்த விஜயத்தின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனுடனும் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தத் தகவலை சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடனும் ஜெய்சங்கர் கலந்துரையாடல் நடத்தவுள்ளார்.

மேற்படி சந்திப்புக்களின்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் முக்கிய இடம் பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7,10)

## போதை...

போதைப்பொருள் அற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் கிளிநொச்சி பாரதி வித்தியாலய பழைய மாணவர்களினால் கவனயீர்ப்பு பேரணிஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பாரதிபுரம் ,சூசைப் பிள்ளையார் சந்தியிலிருந்து பாடசாலை மைதானம் வரை குறித்த கவனயீர்ப்பு பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்ற பதாகைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10)

## தமிழரசுக்...

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு கூட்டம்வவுனியா இரண்டாம் குறுக்கு தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று காலை இடம் பெற்றது.

அதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், இன்றைய (நேற்றைய) கூட்டத்தில் தமிழரசுக்கட்சியின் வழக்கு தற்போது எந்த நிலையில் உள்ளது என்பது தொடர்பான விளக்கம் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

கடந்த தவணையில் எதிராளிகளாக பெயரிடப்பட்ட ஏழுபேருடன் கிளிநொச்சியை சேர்ந்த ஜீவராஜா என்பவர் தன்னையும் இணைத்துக்கொள்ளுமாறு விண்ணப்பம் செய்திருந்தார்.

அவரது விண்ணப்பம் தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின் அந்த ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்காக, கட்சியின் தலைவர் மாவைசேனாதிராஜா மற்றும் யோகேஸ்வரன் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி அவகாசம் வழங்குமாறு தவணை கேட்டிருந்தார். நானும் அப்படி கேட்டிருக்கின்றேன். அதனையடுத்து எதிர்வரும் யூலை 19 ஆம் திகதிக்கு வழக்கு அழைக்கப்படவுள்ளது.

அந்த வகையில் கடந்த தவணைக்கு முன்பாக கட்சியின் மத்தியசெயற்குழு எடுத்த தீர்மானத்திற்கமைய வழக்கை முடிவுறுத்திக் கொள்வது தொடர்பாக நீதிமன்றிலே நான் கூறியிருக்கின்றேன். எதிராளிகள் அழைத்துள்ள ஆட்சேபனைகள் தொடர்பாக வழக்காளி தன்னுடைய நிலைப்பாட்டை தெரியப்படுத்த வேண்டும் என்ற காரணத்திற்காகவே கடந்த தவணை வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சாதாரணமாக இவ்வாறான வழக்கில் ஒரு வருடத்திற்கு பின்னரே முதலாவது விளக்கத்திற்கான திகதி குறிக்கப்படும்.

ஆனால் இந்த வழக்கில் வழக்கை முடிவுறுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக நாங்கள் குறுகிய தினத்தை கேட்டிருக்கின்றோம்.

அன்றையதினம் வழக்காளி நீதிமன்றிலே தெரிவித்த விடயத்துடன், எதிராளிகள் ஏழு பேரும் அழைத்திருக்கின்ற ஆட்சேபனைகளின் அடிப்படையில் மூன்று வித்தியாசமான நிலைப்பாடுகள் எடுக்கப்பட்டது.

குறிப்பாக நானும் கட்சியின் பொதுச்செயலாளரும் நிர்வாக செயலாளரும் ஒரு நிலைப்பாட்டையும், மாவைசேனாதிராஜா மற்றும்யோகேஸ்வரன்ஆகியோர்வேறொரு நிலைப்பாட்டையும் சிறீதரன், குகதாசன் ஆகியோர் இன்னொரு நிலைப்பாட்டையும் எடுத்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் கட்சிஒரு பொதுவான நிலைப்பாட்டை எடுக்காத சூழ்நிலையில் நாங்கள் எப்படி எமது நிலைப்பாட்டை இதற்கு தெரியப்படுத்துவது என்று அவர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இருப்பினும் கட்சிதற்போது ஒரு நிலைப்பாட்டிற்கு வந்துள்ளது. வழக்காளி கோரும் நிவாரணங்களை வழங்கி தெரிவுகளை மீள செய்வதற்கு நான் இணங்குகின்றேன் என்று சிறீதரன் கூறியிருந்தார். அதனை நீதிமன்றிலே நான் சொல்லியிருக்கின்றேன்.

இப்போது நாங்கள் ஒருமித்த நிலைப்பாட்டிற்கு வந்துள்ள காரணத்தினால் நாங்கள் ஏழுபேரும் எட்டாவது எதிராளியான ரத்தினவடிவேலும் இணைந்து, வழக்கிலே எமது மறுமொழியை ஒரு நிலைப்பாடாக பதிவுசெய்து வழக்கை முடிவுறுத்துவதற்காக வழக்காளியோடு இணக்கப்பாட்டிற்கு வருகிறோம் என்று கூறி வழக்கை முடிவுறுத்துவதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக வழக்காளியின் சட்டத்தரணியோடு நான் பேசியிருக்கின்றேன். ஏனையவர்களின் சட்டத்தரணிகளுடன் பேசி பொது நிலைப்பாட்டிற்கு இணங்கி கொள்வதுடன், எதிர் வரும் மாதம் 14 ஆம் திகதி வவுனியாவில் மத்திய குழு மீண்டும் கூடி அந்த மறுமொழி யின் வரைபை மத்திய செயற்குழுவிற்கு சமர்ப்பித்து அதன் அங்கிகாரத்தை பெறவேண்டும்.

அதனை அடுத்த தவணையில் நீதிமன்றில் சமர்ப்பித்து அதன் இணக்கப்பாட்டை செய்யலாம் என்று தீர்மானித்திருக்கின்றோம் என்றார். (ம-7,10)


# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03 04 1926

ஆண்டவன் அடியில் 08 07 2014



## அமரர் சின்னட்டியன் பசுபதி

திதி : வளர்பிறை ஏகாதசி 17.06.2024

தங்களின் பேரன்பு, நேர்மை, புன்னகை, புத்திக்கூர்மை, மனிதாபிமானம், மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கு, இறை பக்தி இவற்றையெல்லாம் உங்களிடமிருந்து நாங்கள் கற்றுக் கொண்டோம். நீங்கள் எங்களை விட்டு இறைவனடி சேர்ந்து பத்து வருடங்கள் கடந்தாலும் ஆறவில்லை எங்களின் துயரம். தங்களை நினைந்து நினைந்து தினம் கலங்குகின்றோம். நீங்கள் மறைந்து பத்து வருடங்களென்ன நூறு வருடங்களானாலும் தங்களின் நினைவு எம்முடன் இருக்கும் தங்களின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல நாவலம்பதி ஞானவயிரவப் பெருமானை வேண்டுவதோடு அமரரின் பத்தாம் ஆண்டு நினைவாக இன்று நண்பகல் 12 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அன்னதானமும் இடம்பெறும்.

அத்துடன் அமரர் சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்த நிதியத்தினால் 2022/2023 ஆம் ஆண்டு ஊரெழு வளர்பிறை பிரதேசத்திலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அமரரின் பூட்டப் பிள்ளையான

1. மாறன் ஆருஜன் - கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை : 161 புள்ளி

இவருடன் ஏனைய சித்தியடைந்தவர்களான

2. கொல்பேட் துஷான் - உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை : 165 புள்ளி
3. ஜெகன் அபிஷா - வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் : 157 புள்ளி
4. குகதாசன் அபிஷாஜினி - வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் : 152 புள்ளி

2023

5. உதயதாசன் டனியா - வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் : 155 புள்ளி
6. நிசாந்தன் சாருகா - வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் : 146 புள்ளி

ஆகியோருக்கு நிதி உதவி வழங்கி கௌரவிப்பு இடம்பெறும்.

நாவலம்பதி,
ஊரெழு கிழக்கு. (1242)

உங்கள் பாசத்தினால் வாடும் குடும்பத்தினர்



புதிய காவலன் திருமண பொருத்துநர்
மாலி சந்தி அல்வாய்

## மணமகள் தேவை

லண்டனில் MSc கற்கும் Electrical Engineer மணமகனுக்கு (கிறிஸ்தவம்) லண்டனில் வதிவிட விசா உள்ளவர் விரும்பத்தக்கது சைவ சமயத்தவரும் விண்ணப்பிக்கலாம் மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

பிறந்த திகதி : 25.02.1991

நட்சத்திரம் : புனர் பூசம் உதயச் செவ்வாய் 18 பாவம்

தொடர்பு : 077 663 0273

(C-0610)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீட்சிக்கான அறிகுறிகளை காண்பிக்கும் இலங்கையின் பொருளாதாரம்- உலக வங்கி

(வோஷிங்டன்)

**இலங்கை இந்த ஆண்டு முன்வைத்த 2.2 சதவீத மிதமான பொருளாதார விரிவாக்கமானது மீட்சிக்கான அறிகுறிகளை காண்பித்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.**

"உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள்' என்ற தலைப்பில் உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது ஜனவரியில் இருந்து அவதானத்துக்கு உட்படுத்தப்பட்டது. ஜனவரி 2.2 சதவீதம் என்ற மிதமான பொருளாதார விரிவாக்கமானது 0.5 சதவீதம் அதிகரித்து. நேர்மறையான மாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

சுற்றுலா மற்றும் பணம் அனுப்புவதில் படிப்படியாக மீண்டு வருவதே இந்த முன்னேற்றத்துக்கு காரணமாக அமைந்துள்ளது. இந்த நிலைமையானது எதிர்வரும் ஆண்டுகளில் இலங்கை பொருளாதார ரீதியான தனது வளர்ச்சியை முன்னறிவிப்பதாக உள்ளது.

குறிப்பாக இலங்கை எதிர்வரும் 2026 ஆம் ஆண்டளவில் 3 சதவீதமான பொருளாதார வளர்ச்சியைத் தொடும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த நம்பிக்கையான கண்ணோட்டம் வெற்றிகரமான கடன் மறுசீரமைப்பு பேச்சு வார்த்தைகள் மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை செயற்படுத்துவதைச் சார்ந்துள்ளது.

திட்டமிடப்பட்ட நிதி ஒருங்கிணைப்பு முயற்சிகளின் சாத்தியமான எதிர்மறை தாக்கத்தை ஈடு செய்வதற்கு அர்ப்பணிப்பான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது இலக்குகளை அடைவதில் இலங்கைக்கு பின்னடைவான நிலைமைகள் காணப்படாது என்றுள்ளது. (நி)

# மருந்துகளுக்கு தட்டுப்பாடில்லை

## சுகாதார அமைச்சர் பத்திரன

(கொழும்பு)

850 அத்தியாவசிய மருந்துகளில் சில மருந்துகளைத் தவிர அனைத்து உயிர்காக்கும் மருந்துகளும் தட்டுப்பாடின்றி பராமரிக்கப்படுவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

எல்பிட்டியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நடமாடும் சுகாதார வைத்திய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே சுகாதார அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தேசிய கொள்வனவு முறைமைக்கு அமைவாக உயர்தர மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## நூலக தகவல் விஞ்ஞான துறையின் அபிவிருத்தியும் எதிர்காலத் திட்டமிடலும் கலந்துரையாடல்

நூலக தகவல் விஞ்ஞான துறையினர் எதிர்நோக்கும் சவால்களை சீர் செய்யும் நோக்குடன் இத்துறையில் கடமையாற்றுபவர்களையும், நூலக துறையில் ஆர்வங்கொண்டு அதனைக் கற்றுக் கொண்டு இருப்பவர்களையும், நூலக அபிவிருத்தியில் அக்கறை கொண்டுள்ளவர்களையும் இணைத்து செயற்படுவதற்கு நூலக தகவல் விஞ்ஞான துறைசார் அமைப்பொன்றினை உருவாக்கும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**காலம்-17.06.2024 (இன்று திங்கட்கிழமை)**
**இடம் - மாநாட்டு மண்டபம் யாழ் பொதுசன நூலகம்**
**நேரம்- மு.ப 10.00 மணி**

இக் கலந்துரையாடலில் பங்கு கொண்டு இத்துறை சார் வளர்ச்சிக்கான தங்கள் கருத்துக்களை வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(1249)

க.கௌசல்யா
தலைவர், இடைக்காலக்குழு, நூலகத்துறை.

# மரண அறிவித்தல்

## திருமதி.சறோஜினிதேவி குலசேகரம்



**அல்லையம்பதி துன்னாலையை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிட மாகவும் கொண்ட காலஞ்சென்ற நடராசா அழகம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற வடிவேலு மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும் கௌரி டிரேடர்ஸ் (Colombo) உரிமையாளர் வடிவேலு குலசேகரத்தின் மனைவி சறோஜினிதேவி குலசேகரம் அவர்கள் 14.06.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் வசந்தி (London), ஜெயந்தி (London), நிதர்ஷன் (London) ஆகியோரின் தாயாரும் ரமேஷ் (London), சுரேஸ் (London),கயலாணி (London) ஆகியோரின் மாமியாரும் நிக்கேஷ், அக்ஷயா, சாஸ்விகா, சாஸ்வின் ஆகியோரின் அம்மம்மாவும், ஆகாஷ் இன் அப்பம்மாவும் காலஞ்சென்ற வடிவேலு கந்தசாமி, வடிவேலு சந்திரசேகரம், ராஜேஸ்வரி உபாசரட்ணம் ஆகியோரின் மைத்துனியும், நடராஜா இரத்தினராஜா, காலஞ்சென்ற நடராஜா பாலசந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 16.06.2024 நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அன்னாரின் பிறப்பிடமான அல்லையம்பதி துன்னாலை கரவெட்டிக்கு எடுத்துச்செல்லப்பட்டு 17.06.2024 இன்று திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் (அல்லையம்பதி துன்னாலை) அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் பிற்பகல் 1.00 மணியில் இருந்து கிரியைகள் ஆரம்பித்து 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**பிறப்பு 18.10.1951** | **இறப்பு 14.06.2024**

**அல்லையம்பதி,**
**துன்னாலை, கரவெட்டி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(சி-602)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பதக்கங்களை பெற்று பெருமை சேர்த்த நெளுக்குளம் கலைமகள் மாணவர்கள்

அகில இலங்கை பாடசாலைகள் மெய் வல்லுநர் சங்கம் நடத்திய சார் ஜான் டாபேட் சம்பியன்ஷிப் 2024 ஆம் ஆண்டுக்கான போட்டியின் முதல் கட்ட போட்டியானது நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போட்டியில் வவுனியா நெளுக்குளம் கலை மகள் மகா வித்தியாலயம் 15வயது பெண் கள் பிரிவு 200 மீற்றர், 100 மீற்றர் ஓட்ட போட்டியில் ர.டர்சியா தங்க பதக்கத்தினையும், நீளம் பாய்தலில் வெள்ளி பதக்கத்தினையும், ச.ரக்சனா நீளம் பாய்தல் போட்டியில் திறமை சான்றிதழும் ,800 மீற்றர் ஓட்ட போட்டியில் வெங்கல பதக்கம், 400 மீற்றர் ஓட்ட போட்டியில் வெள்ளி பதக்கம் மற்றும் ப.தர்சன் 15 வயது ஆண்கள் பிரிவில் குண்டு போடுதல் போட்டியில் திறமை சான்றிதலும், ம.மயூரா 13 வயது பெண்கள் பிரிவில் உயரம் பாய்தல் போட்டியில் திறமை சான்றிதழையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)



# குரோஷியாவை வீழ்த்தியது ஸ்பெயின்



"யூரோ" கோப்பை கால்பந்து லீக் போட்டியில் ஸ்பெயின் அணி 3-0 என குரோஷியாவை வீழ்த்தியது.

ஜேர்மனியின் பெர்லினில் நேற்று முன்தினம் நடந்த "யூரோ" கோப்பை கால்பந்து "பி" பிரிவு லீக் போட்டியில் உலகின் "நம்பர்-8" ஸ்பெயின் அணி, 10 ஆவது இடத்தில் உள்ள குரோஷியாவை எதிர்கொண்டது. ஆட்டத்தின் 29 ஆவது நிமிடத்தில் ஸ்பெயினின் அல்வாரோ மொராடா ஒரு கோல் அடித்தார்.

அடுத்த நிமிடத்தில் குரோஷியாவின் மேடியோ கோவாசிக் கோல் அடிக்க முயற்சித்த பந்தை ஸ்பெயின் கோல்கீப்பர் உனாய் சைமன் சாமர்த்தியமாக தடுத்தார்.

தொடர்ந்து அசத்திய ஸ்பெயின் அணிக்கு பேபியன் ரூயிஸ், 32 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து கைகொடுத்தார். "ஸ்டாப்பேஜ்" நேரத்தில் (43:3 ஆவது நிமிடம்) ஸ்பெயினின் டேனியல் கார்வஜல் ஒரு கோல் அடித்தார். முதல் பாதி முடிவில் ஸ்பெயின் அணி 3-0 என முன்னிலை வகித்திருந்தது.

இரண்டாவது பாதியின் 80 ஆவது நிமிடத்தில் குரோஷியாவுக்கு கிடைத்த "பெனால்டி" வாய்ப்பில் புரூனோ பெட்கோவிச் ஒரு கோல் அடித்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஸ்பெயின் வீரர்கள் "அப்பீல்" செய்தனர். பின், "வார்" தொழில்நுட்பம் மூலம் ஆய்வு செய்து இந்த கோல் திரும்ப பெறப்பட்டது. ஆட்டநேர முடிவில் ஸ்பெயின் அணி 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (நி-6)

# நியூசிலாந்து முதல் வெற்றி


உகாண்டாவை 40 ரன்னுக்கு சுருட்டிய நியூசிலாந்து அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் முதல் வெற்றி பெற்றது.

வெஸ்ட் இண்டீசின் தரவ்பாவில் (டிரினிடாட்) உள்ள பிரைன் லாரா மைதானத்தில் நடந்த "ரி-20" உலக கோப்பை "சி" பிரிவு லீக் போட்டியில் நியூசிலாந்து, உகாண்டா அணிகள் மோதின. ஏற்கனவே இரு அணிகளும் "சூப்பர்-8" வாய்ப்பை இழந்த நிலையில் "டாஸ்" வென்ற நியூசிலாந்து அணி "பீல்டிங்" தேர்வு செய்தது.

நியூசிலாந்து பந்துவீச்சில் சரிந்த உகாண்டா அணி 18.4 ஓவரில் 40 ரன்னுக்கு சுருண்டது. கென்னத் வைஸ்வா 11 ரன் எடுத்தார். நான்கு பேர் "டக்-அவுட்" ஆகினர். ஐந்து பேர் ஒற்றை இலக்க ரன்னில் அவுட்டாகினர். நியூசிலாந்து சார்பில் டிம் சவுத்தீ 3, பவுல்ட், சான்ட்னர், ரச்சின் ரவிந்திரா தலா 2 விக்கெட் சாய்த்தனர்.

இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு ஆலன் (9) ஏமாற்றினார். ஜுமா மியாகி பந்தில் வரிசையாக 2 பவுண்டரி அடித்த கான்வே வெற்றியை உறுதி செய்தார். நியூசிலாந்து அணி 5.2 ஓவரில் ஒரு விக்கெட்டுக்கு 41 ரன் எடுத்து வெற்றி பெற்றது. கான்வே (22), ரச்சின் (1) அவுட்டாகாமல் இருந்தனர்.

முதலிரண்டு போட்டியில் ஆப்கானிஸ்தான், வெஸ்ட் இண்டீசிடம் வீழ்ந்த நியூசிலாந்து அணி, இத்தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்தது. ஆட்ட நாயகன் விருதை சவுத்திக்கு வழங்கப்பட்டது. (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியின் 91 ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

# தீர்வின்றேல் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை

## புகையிரத நிலைய அதிபர் சங்கம்

(கொழும்பு)

சேவைத்துறையில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அரச சேவை ஆணைக்குழு 18 ஆம் திகதி சாதகமான தீர்வினை வழங்காவிட்டால் எவ்வித பேச்சுவார்த்தையிலும் ஈடுபடாமல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என புகையிரத நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார்.

பதவி உயர்வு,ஆட்சேர்ப்பு ஆகியவற்றில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி புகையிரத அதிபர் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதாக 14 ஆம் திகதி அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து, புகையிரத நிலைய அதிபர் சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் புகையிரத திணைக்களத்தின் நிறைவேற்று சபை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது.

அதற்கமைய, நிறைவேற்று சபையில் உறுதியான தீர்வு எட்டப்படாத நிலையில் பதில் புகையிரத பொது முகாமையாளர் உட்பட புகையிரத நிலைய அதிபர் சங்கத்தினர் பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவண்ண உட்பட போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து பதில் அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் தீர்மானத்தை கைவிட்டுள்ளனர்.

பிரச்சினைகளுக்கு தீர்வு காண வகுக்கப்பட்ட செயற்றிட்டத்தில் ஒருசில தொழில்நுட்ப கோளாறுகள் காணப்படுவதால் இறுதி தீர்மானம் எடுப்பது தாமதமாகியுள்ளது என அரச சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்தோடு, இது தொடர்பான உறுதியான தீர்மானத்தை நாளை அறிவிப்பதாக அரச சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும், அன்றைய தினம் சாதகமான தீர்வின்றேல் எவ்வித பேச்சுவார்த்தையிலும் ஈடுபடாமல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என புகையிரத நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# வாக்குகளுக்காக வடக்கிற்கு படையெடுக்கும் அரசியல்வாதிகள்

(கொழும்பு)

13 ஆவது திருத்தம் அரசிய லைமைப்பில் உள்ளடக்கப்பட்ட ஒன்றாகும் என்பதால், குறித்த திருத்தத்தில் காணப்படும் குறைநிறைகளை நிவர்த்தி செய்ய வேண்டியதே தற்போதைய தேவையாகும் என முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,சில அரசியல்வாதிகள் வடக்கில் கூறும் கருத்தினை தெற்கில் கூற அச்சப்படுவதுடன், 13 ஆவது திருத்தத்தை நடை முறைப் படுத்தப் போவதாகக் கூறுவதானது அரசியல் இருப்பை தக்கவைப்பதற்கான முயற்சியாகும்.இது வடக்கு மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து அவர்களை ஏமாற்றும் செயலாகும்.

13 ஆவது திருத்தம் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்ட ஒன்றாகும். ஒரு சில அரசியல் வாதிகள் வடக்கில் கூறும் கருத்தினை தெற்கில் கூற அச்சப்படுகின்றனர்.

13 ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவதாக எவரும் கூறத்தேவையில்லை. ஏனெனில் 13 ஆவது திருத்தம் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தத்தில் காணப்படும் குறைநிறைகளை நிவர்த்தி செய்ய வேண்டியதே தற்போதைய தேவையாகும்.

ஆனால் அரசியல்வாதிகள் தற்போது வடக்கிற்கு சென்று 13 ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்தபோவதாக கூறுவதானது அரசியல் இருப்பை தக்க வைப்பதற்கான முயற்சியாகும்.

இது வாக்கு வேட்டையை இலக்கு வைத்து மக்களை ஏமாற்றும் செயலாகும்" என ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.(நி-6)

# தமிழ் கட்சிகளை சந்திக்கவுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

(கொழும்பு)

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கை வருகை தரவுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான பயணத்துக்கு முன்னர் ஜெய்சங்கரின் பயணம் இடம்பெறும் என்பதை இலங்கை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. இலங்கை வரும் ஜெய்சங்கர் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் மலையகத் தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்துவார் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அத்துடன், இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார். (நி)

# வெண்ணிற ஈ தாக்கத்தினால் இளநீர் ஏற்றுமதியில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

வெண்ணிற ஈ தாக்கத்தினால் இலங்கையின் இளநீர் ஏற்றுமதியில் 30% வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

குறித்த தகவலை தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. வெண்ணிற ஈ தாக்கத்தினால் இளநீர் செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நிலவிய வறட்சியினால் வெண்ணிற ஈக்களின் பரவல் அதிகரித்துள்ளது.வெண்ணிற ஈ, மஞ்சள் நிறத்தினால் அதிகம் ஈர்க்கப்படுவதால், இளநீர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (நி)

# இராசிபலன்

17.06.2024
ஆனி 03, திங்கட்கிழமை
ஏகாதசி பின்னிரவு 5.50 மணிவரை
சித்திரை பிற்பகல் 1.38 மணிவரை

சுபநேரம் 11.53-1.23 மணிவரை
இராகு காலம் 7.23-8.53 மணிவரை
ஏகாதசி விரதம், ஹஜ்ஜிப் பெருநாள்,

சித்தாமிர்தம்.
சந்திராஷ்டமம்.
சதயம்,பூரட்டாதி.

வள்ளுவன்

**மேஷம்** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்,உடல் நலன் சிராகும், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்** ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் தொடர்பான சில காரியங்களுக்கு சற்று அலைய நேரிடலாம்,பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** வருமானம் திருப்திகரமாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் கூடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழில் மேன்மையுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்** ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உறவு பகை பாராமல் உதவும் நாள், உறவினர்கள் உங்களின் நலனில் அக்கறைகாட்டுவர்.

**விருச்சிகம்** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** அலுவலகப் பணிகள் துரிதமாகும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**கன்னி** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்,மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீ-தியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள், உடல்நலனில் கவனம் தேவை.

வார்த்தைகள் முக்கியம் அல்ல அதன் அர்த்தம் தான் முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுமய செயற்றிட்டத்தின் கீழ் காணிப்பத்திரங்கள் வழங்கி வைப்பு



(மன்னார்)

மன்னார் மாவட்ட மக்களுக்கு 20 லட்சம் இலவச காணி உறுதிப்பத்திரம் வழங்கும் "உறுமய" தேசிய செயற்றிட்டத்தின் கீழ் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மன்னார் நகர மண்டப கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த செயற்றிட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட மக்களுக்கு 5000 காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதுடன், முதற்கட்டமாக 442 காணி உறுதிப் பத்திரங்கள் நேற்று ஜனாதிபதியினால் அடையாளமாக வழங்கிவைக்கப்பட்டது.

கடந்த மோசமான கால நிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் அழிவடைந்த விவசாய பயிர்களுக்கு விவசாய காப்புறுதி நட்டஈடு வழங்கப்பட்டதுடன், அப்பகுதி மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் நிதி வழங்கப்பட்டது.

வடக்கு பிராந்தியத்தில் சுமார் 90,000 குடும்பங்கள் காணி உரிமை கோருகின்றனர். 45,000 குடும்பங்களுக்கு எவ்வித பிரச்சினையும் இன்றி பத்திரப்பதிவு வழங்கும் திறன் கொண்டது. ஏனைய 45,000 குடும்பங்கள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் மற்றும் வட மாகாண சபைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்பு விடுத்துள்ளார். (நி-6-285)

# மீசாலையில் வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

## 4 பேர் கைது


(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை வடக்கு தட்டாங்குளம் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் கையில் வெட்டுக் காயத்திற்கு இலக்காகியுள்ளார்.

அப்பகுதியில் உள்ள மைதானமொன்றில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வொன்றின் போதே மேற்படி மோதல் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக தெரிய வருகிறது.


இதில் மீசாலை வடக்கைச் சேர்ந்த 26 வயதான இளைஞன் கையில் வெட்டுக் காயத்திற்கு இலக்கான நிலையில் யாழ். போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் நால்வரை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)



சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நவரத்தினத்தின் 95 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக் கிழமை நவரத்தினம் நற்பணி மன்றம் ஊடாக சாவகச்சேரியில் தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.(படம்- சுபேசன்)

# மன்னார் ஆயரை சந்தித்து கலந்துரையாடிய ஜனாதிபதி



(மன்னார்)

மன்னாரிற்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடி உள்ளார்.

மன்னார் ஆயர் இல்லத்தில் குறித்த சந்திப்பு நடைபெற்றது. கலந்துரையாடலை மேற்கொண்ட ஜனாதிபதி மன்னார் ஆயரிடம் ஆசி பெற்றார்.

சந்திப்பின் போது இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்,மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் கிறிஸ்து நாயகம் அடிகளார் , முன்னாள் குரு முதல்வர் அருட்தந்தை விக்டர் சோசை அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயரினால் ஜனாதிபதிக்கு மாதா சொரூபம் ஒன்று அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது. (நி-4-6-285)

# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த திருகோணமலையை சேர்ந்த சாதனை வீரர்




(திருமலை)

திருகோணமலையை சேர்ந்த முஹம்மட் ஹஷன் ஸலாமா நேற்று முன் தினம் சனிக்கிழமை இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து இலங்கையின் தலை மன்னாருக்கிடையிலான 42Km தூரத்தினை உடைய பாக்கு நீரிணையை நீந்தி சாதனை படைத்துள்ளார்.

சனிக்கிழமை அதிகாலை 2 மணிக்குத் தொடங்கி முற்பகல் 11 மணியளவில் நீந்திமுடித்துள்ளார்.

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த இலங்கையின் எட்டாவது நபராக திகழ்கிறார்.

தரம் 10 இல் கல்வி கற்கும் 15 வயதான இவர் கடந்த மூன்று மாதங்களாக இச் சாதனை முயற்சிக்கான தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வந்துள்ளார். (நி-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 250-450 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 240 | 200 | 185 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 150 | 200 | 200 | 240 |
| தக்காளி | 550 | 600 | 600 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 160 | 140 | 120 | 200 |
| கோவா | 300 | 330 | 250 | 250 | 300 |
| கரட் | 350 | 450 | 500 | 350 | 450 |
| பூசணி | 140 | 140 | 150 | 120 | 160 |
| புடோல் | 250 | 300 | 250 | 150 | 320 |
| வாழைக்காய் | 160 | 150 | 120 | 130-170 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 440 | 300 | 300-500 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 240 | 250 |
| பாகற்காய் | 1000 | 900 | 1200 | 700 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 220 | 350 |
| கருணைக் கிழங்கு | 200 | 240 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 400 | 200 | 300-500 | 300 |
| லீக்ஸ் | 550 | 600 | 600 | 550 | 700 |
| பீற்றூட் | 500 | 550 | 700 | 300 | 700 |
| கறிமிளகாய் | 600 | 500 | 500 | 500 | 700 |
| முருங்கைக்காய் | 700 | 700 | 450 | 300-450 | 700 |
| போஞ்சி | 800 | 800 | 700 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 120 | 120-150 | 140 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1000 | 900-1150 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 500 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 550 | 500 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 160 | 240 | 200 | 100 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 90 | 80 |
| ஈரப்பலா | 150 | 180 | 120 | 100 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை முறைமை பிரச்சினைகளுக்கு தீர்வாகாது

## லண்டனில் அநுரகுமார



**(கொழும்பு)**

**மாகாண சபையை அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வாக நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**

லண்டனில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபையை இந்த அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வாக நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எனினும், இந்த மாகாண சபையானது தங்களுக்கான உரிமை என தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் நம்புகின்றனர்.

எனவே, மாகாண சபையை யாரேனும் நீக்குவதாக நினைத்தால் அது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமையை பறிப்பதாக அமைந்து விடும். இதனால் மீண்டும் தேவையற்ற பிரச்சினைகள் தோற்றம் பெறும்.

ஆகவே தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்கி, தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான புதிய வழியை கண்டறியும் வரை மாகாண சபை முறைமை அவ்வாறே முன்னெடுத்துச் செல்லப்படும்.

எனினும் இதுவொரு தற்காலிக தீர் வாக அமையுமே தவிர நிரந்தரத் தீர்வாக அமையாது.

இதேவேளை பெருந்தோட்ட மக்க ளின் காணி, வீடு, கல்வி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கும் நாங்கள் உரிய தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு மலையகம் என்ற கொள்கைளை வெளியிட்டுள்ளோம்.

அனைத்து பிரச்சினைகளும் அதிகாரப் பகிர்வை மையமாகக் கொண்டே நகர்கின்றன. ஆகவே தற்போதுள்ள மாகாண சபை முறைமையை அவ்வாறே முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

பொது மக்களிடமிருந்தே எமக்கு அதிகாரம் கிடைக்கின்றதுடன் அந்த அதிகாரத்தை பயன்படுத்துவதற்கான வரையறைகளையே அரசியலமைப்பே எமக்கு வழங்குகின்றது.

ஆகவே மக்களின் நம்பிக்கையில் எமக்கு கிடைத்துள்ள அதிகாரத்தை மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துவதற்கு நாங்கள் அஞ்சப் போவதில்லை.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முயற்சிக்கின்றமையானது முடிந்தளவுக்கு இனவாதத்தை தோற்கடிப்பதற்காகும். இனவாதம் அவ்வாறே இருக்குமாக இருந்தால் நாங்கள் ஆட்சிக்கு வரமாட்டோம்.

எனவே, நாங்கள் ஆட்சிக்கு வரும் போது இனவாதம் தோல்வியுற்றிருக்கும் என அநுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார். (நி-6)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்திரம்: மகம்<br>கி.பா: 28 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L,கடை (Own)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/10409 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 58 1/4<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Banker<br>தொ.இ: G/2931 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 58<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: கட்டட ஒப்பந்தக்காரர் (Pvt)<br>எதிர்பார்ப்பு-தகுதியான பெண்<br>தொ.இ: B/11654 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/9548 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Engineer (Newzeland)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண், சைவ போசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/14355 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Bsc,PHD(Reading)<br>எதிர்பார்ப்பு: Engineer.பட்டதாரி<br>தொ.இ: G/13339 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

நாட்டின் பெருந்தோட்டப்புற தமிழ் மொழி மூலம் பாடசாலைகளுக்கு ஆசிரியர் உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தகைமைகளைக் கொண்ட இரு சாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)


# உபநயன வைபவம்

ஸ்ரீ.ஸ்ரீமதி வாசுதேவக்குருக்கள்-சாருலதா
தம்பதிகளின் ஏக புத்திரன்
சிரஞ்சீவி.
சிவானுஜன் சர்மா
அவர்களுக்கு
17.06.2024 இன்று திங்கட்கிழமை
சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச
திருக்கோவிலில் நடைபெறும்
உபநயன வைபவத்தில்......

ஈசுர விநாயகர் தேவஸ்தானம்
பறாளாய், சுழிபுரம்
17.06.2024



ஈசுர விநாயகரின் அருளாசியுடன்
அன்புடன் வாழ்த்தி வணங்குகின்றோம்.

சித்தர்கள் வாழ்ந்த சிறப்புமிக்க
சித்தன்கேணி ஊரிலே சோழியபுரம் என்னும்
சுழிபுரத்தின் அம்மையார் பேர்புகழ் ஸ்ரீ.ஸ்ரீமதி
சபாரத்தினசர்மா-வடிவாம்பிகை வழிவந்த
பார்புகழ் ஸ்ரீ.ஸ்ரீமதி
வாசுதேவக்குருக்கள்-சாருலதா தம்பதிகளின்
குல தெய்வமாம் சிவகாமி சிதம்பரேஸ்வரர்
திருவருளினால் வந்துதித்த
சிவானுஜன் சர்மா அவர்களின்
பிரம்ம உபதேச நாளாம் உபநயனச் சடங்கு
உபதேசத் திருக்கோவில் சரஸ்வதி அம்பாளின்
அனுக்கிரகத்துடன் பறாளாய் ஈசுர விநாயகரின்
பரிபூரண கிருபாகடாச்சத்துடனும்
சிறப்புற்று நலம்பெறவும் சிவானுஜன் சர்மா ஐயா!
வேதமுதல் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்க!
வளமுடன் வளர்க! புகழ் ஓங்குக!

அன்புடன்
சோழியூரான் பிறைசூடிக்குரு குடும்பம்

(1248)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திராவில் கோர விபத்து 6 பேர் உயிரிழப்பு



(டில்லி)

ஆந்திராவில் இரு லொறிகள் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஐவர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆந்திரா மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்திலிருந்து மீனவர்களை ஏற்றிக் கொண்டு, பந்துமல்லி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த லொறியை, பாரவூர்தி முந்திச்செல்ல முற்பட்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மீனவர்களை ஏற்றி சென்ற லொறியை, பாரவூர்தி அதிபயங்கரமாக மோதியதில் இந்த விபத்து நேர்ந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த கோர விபத்தில் 5 மீனவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# குடிநீருக்கும் பஞ்சம்! உணவு விநியோகம் சிக்க தொற்றுநோய்கள் தீவிர

## உயிரிழக்கும் அபாய

## ஐ.நா எச்சரிக்கை

பாலஸ்தீனத்தை இஸ்ரேலின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க பல்வேறு ஆயுதம் ஏந்திய குழுக்கள் செயற்பட்டு வரும் நிலையில் ஹமாஸ் அமைப்பு கடந்த ஆண்டு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.

இதனால், இரு நாடுகளுக்கும் இடையில் தற்போது வரை போர் நீடித்து வருவதால், காசாவுக்குள் நிவாரணப் பொருட்கள் எதுவும் கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, உணவுக்கும் குடிநீருக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள் உணவு கிடைக்காமல் அடுத்தடுத்து உயிரிழந்துள்ள துடன், தொற்று நோய் பாதிப்புகளும் தீவிரமடைந்துள்ளன.

இந்த நிலையில் ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்வதாக ஹமாஸ் அறிவித்துள்ளது.

ஆனாலும் இஸ்ரேல் போர் நிறுத்

# ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான வான்

## 10 பேர் ஸ்தலத்தில் பலி



(டில்லி)

இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் இடம்பெற்ற விபத்தில் சுமார் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தின் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் நேற்று இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஆலய வழிபாட்டிற்குச் சென்று கொண்டிருந்தவர்கள் பயணித்த சுற்றுலா வான் ஒன்று ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்து இடம்பெற்றவேளை 24 பேர் குறித்த வானில் பயணித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு விமானம் மூலம் டில்லி எய்ம்ஸ் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதென வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(பி)

# சுவிட்ஸர்லாந்தில் உக்ரைன் அமைதி மாந ரஷ்யா பங்கேற்காததனால் சீனாவும் ப



(ஜெனீவா)

நூறு நாடுகளுக்கும் மேல் பங்கேற்கும் 'உக்ரைன் அமைதி மாநாடு' சுவிட்ஸர்லாந்தில் நேற்று முன்தினம் ஆரம்பமனது.

ரஷ்யாவுக்கும் உக் ரைனுக்கும் இடையில் 2 ஆண்டுகளுக்கும் மேல் நீடித்துவரும் போர் குறித்து விவாதிப்பதற்காக, சுவிட்ஸர்லாந்தில் நிட்வால்ட் பகுதியில் அமைந்துள்ள பார்கன்ஸ்டாக் சுற்றுலா விடுதியில் இந்த சர்வதேச மாநாடு இடம்பெற்று வருகிறது.

குறித்த மாநாட்டில் அணுசக்தி பாதுகாப்பு, கடல் பயண சுதந்திரம், உணவு பாதுகாப்பு போன்ற மூன்று விவகாரங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் ஈக்வடார், ஐவரி கோஸ்ட், கென்யா, சோமாலியா உட்பட பல ஐரோப்பிய நாடுகளின் 50 இற்கும் மேற்பட்ட தலைவர்கள் பங்கேற்றுள்ளதுடன், சுமார் 100 நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில் இதில் பங்கேற்றுள்ள, உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஜெலென்ஸ்கி ஊடகவியலாளர்களை சந்தித்த போது, உலகமே ஒன்று கூடினால் ஒரு போரை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என தெரிவித்துள்ளார்.

அதன்படி, உக்ரைன்



போரை முடி
காக, உலக
இந்த மாநாடு
குறிப்பிட்டார்.
முடிவுக்குக்
மாநாட்டில், ர
இதனால்
மாநாட்டை சீ
குறிப்பிடத்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

க்கலில்!
விரம்!



## யத்தில் காசா மக்கள்


(காசா)

**காசாவில் உணவு விநியோகம் சிக்கலில் இருப்பதால் அங்கு பட்டினி காரணமாக ஏராளமான காசா மக்கள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.**

டைக்
ரிழந்
பாதிப்
ன.
பாது
ப்பட்ட
ற்றுக்
ித்துள்
நிறுத்

தத்திற்கு தயராக இல்லை என்பதால், தெற்கு காசாப் பகுதியில் உணவை விநியோகிக்க வாய்ப்பு இல்லை என்று ஐ.நா எச்சரித்துள்ளது. (நி)

## மக்காவில் கடும் வெப்பம் 6 யாத்திரிகர்கள் உயிரிழப்பு



(ஜெத்தா)

சவுதி அரேபியாவில் உள்ள மக்கா நகரில் ஹஜ் யாத்திரை சென்ற 6 யாத்திரிகர்கள் கடும் வெப்பம் காரணமாக உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மக்கா வெப்பநிலை 48 டிகிரி செல்சியஸைத் தாண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இவ்வாறான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும், உயிரிழந்த 6 பேரும் ஜோர்தான் நாட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சவுதி அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்த ஆண்டு ஹஜ்ஜில் 1.8 மில்லியன் யாத்திரிகர்கள் பங்கேற்பார்கள் என கூறப்படுகிறது. (நி)

## மாநாடு ஆரம்பம் வும் புறக்கணிப்பு



போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, உலக நாடுகளை ஒன்று திரட்டுவதில் இந்த மாநாடு வெற் றியடைந்துள்ளதாக அவர் தறிப்பிட்டார். எனினும், உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இந்த மாநாட்டில், ரஷ்யா பங்கேற்கவில்லை.

இதனால் குறித்த 'உக்ரைன் அமைதி மாநாட்டை சீனாவும் புறக்கணித்துள்ளமை தறிப்பிடத்தக்கது. (நி)

## ரஷ்யாவிற்கு உதவும் சீனா

## எச்சரித்த ஜி-7 தலைவர்கள்



(ஜெனீவா)


மொஸ்கோவின் நடவடிக்கைகளிற்கு பொருள் உதவிகளை வழங்குபவர்களிற்கு எதிராக தடைகள் விதிக்கப்படும் என ஜி-7 நாடுகளின் தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

ரஷ்யா உக்ரைன் மீதான யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு சீனா உதவுகின்றது எனவும் ஜி-7 நாடுகளின் தலைவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ரஷ்யாவின் இராணுவ தொழிற்துறை வளாகத்திற்கு உதவுவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கடும் நடவடிக்கைகளை எடுக்கச் செய்வதற்கான முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ள வேளையிலேயே ஜி-7 நாடுகளின் தலைவர்களின் இந்த கடும் எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

ரஷ்யாவின் பாதுகாப்பு தொழிற்துறை வளாகத்திற்கான சீனாவின் தொடரும் ஆதரவு உக்ரைனில் அதன் சட்டவிரோத போக்கை ரஷ்யா தக்கவைப்பதற்கு உதவுகின்றது என ஜி-7 தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (நி)

## தென்னாபிரிக்காவில் மீண்டும் ஜனாதிபதியாக சிறில் ரமபோசா



(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவின் ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியிற்கும் எதிர்க்கட்சிகளிற்கும் இடையிலான முக்கிய கூட்டணி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அந்த நாட்டின் ஜனாதிபதியாக சிறில் ரமபோசா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவின் ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியிற்கும் எதிர்க்கட்சிகளிற்கும் இடையிலான முக்கிய கூட்டணி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்தத் தெரிவு இடம் பெற்றுள்ளது.

சிறில் ரமபோசா மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து நாட்டின் நலனுக்காக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா தமது உரையில் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# வீழி (விழுதி)

**Botanical Name - cadaba farinosa**
**Family - capparida ceae**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நிறைய கிளையுடைய பெருஞ் செடி, இளஞ்செடியில் மென்மையான உரோமங்கள் தண்டில் காணப் படும். முதிர்ந்த செடியில் தண்டுகள் மழமழப்பாக இருக்கும். தனியிலை நீள்வட்டமாகவும் ஒன்றுவிட்ட அமைப்பிலும் காணப்படும். மங்கிய பச்சை நிறமுடையதாகக் காணப படும். இலைக்காம்புகள் 2.5 - 4மில்லிமீற்றர் நீளமானவை. பூக்கள் அழகான வெள்ளை நிறமுடை யவை. உருண்டையான கரகரப் பான பழங்கள், நிறைய விதை களைக் கொண்டிருக்கும்.

மிகவும் அரிதான மூலிகையு மாகும். மனித நடமாட்டம் குறைந்த இடங்களில் கூடுதலாக பரம்பிக் காணப்படும்.

இது ஒரு காயகற்ப மூலிகை யாகும். வீழியின் காய்கள் மேற் றோல் பச்சையாகவும் இருக்கும். அதனுள் செந்நிறமான சதைப் பகுதி காணப்படும். காய்கள் வைகாசியில் இருந்து ஆவணி மாதம் வரை செடிகளில் காணப்படும். வரட்சியை தாங்கி வளரக்கூடியது. ஒடியக்கூடிய இலைகளைக் கொண்டது. இதன் இலைகள் உடலுக்கு பலத்தை



கொடுக்ககூடியது. 2-3 இலைகளை நன்கு கழுவி மென்று சாப்பிட்டால் உடலுக்குப் பலத்தைக் கொடுக்கும். முக்கியமாக சித்தர்கள் தாங்களே இந்த மூலிகையை கற்ப மூலிகை யாகப் பயன்படுத்தியுள்ளார்கள்.

இதனால் குடற்புழுக்கள் தோல் நோய்கள், கைகால் குடைச்சல், சிறு நீர்ப்பெருக்கு, சிரங்கு, மூட்டுவலி, சளி போன்ற நிலைமைகளில் பயன்படும் மருத்துவ பண்புகளைக் கொண்டது.

விழுது இலைகள் 2 உடன் மிளகு சேர்த்து மென்று சாற்றை விழுங்கி சக்கையைத் துப்பி விட வேண்டும். இதனால் களைப்பு, மூச்சு வாங்கல் குறையும்.

வீழி இலைகளை கொண்டு கூட்டு, சட்னி, ரசம் தயாரித்து எடுக்க சளி, இருமல் குணமாகும் .நுரை யீரலை பலப்படுத் தும்.

வீழி இலைச் சாறு 10 மில்லி லீற்றர் அளவு எடுத்து 100 மில்லிக் கிராம் மிளகுத் தூள் சேர்த்து தினம் ஒரு வேளை 48 நாட் கள் சாப்பிட்டு வர பெண்களுக்கு கருமுட்டை நன்கு உருவாகும்.

குழந்தைப் பேற்றை உண்டாக் கும் தன்மை கொண்ட மூலிகை. வீழிலைச் சாறு - 100 மில்லி லீற்றர், நல்லெண்ணெய் -200மில்லி லீற்றர் சேர்த்து ஒரு வானலியில் விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி ஆற விட்டு தலைக்கு வைத்து 3 மணி நேரம் ஊறவிட்டு முழுகி வர மண் டைச் சளி, பீனிசம் குணமாகும். மூக் கடைப்பு தீரும். இதே தைலத்தை மூட்டு வலி, தோல் நோய்களுக்கும் வெளிப் பிரயோகமாகப் பயன்ன டுத்தலாம்.

உடம்பில் ஏற்படும் வளர்ச்சியை மாற்றங்களை சீராக்கக் கூடியது. வீழி பொதுவாக மருத நிலத்தில் (வயல் சார் இடம்) வளரக் கூடியது. யோகர் எனும் சித்தர் கருவீழி என்னும் ஒரு வகைக் காயகற்ப மூலிகை மலையுச் சியில் காணப்படும் எனவும் குறிப்பிட் டுள்ளார்.

இலுப்பை எண்ணெய் -200 மில்லி லீற்றர், தேங்காய் எண் ணெய்-200மில்லி லீற்றர், வீழி இலைச்சாறு 400மில்லி லீற்றர் ஒன்று சேர்த்து ஒரு வானலியில் இட்டு மெழு பதத்தில் காய்ச்சி வடித்து புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

மூட்டு வலி மூட்டு வீக்கத்திற்கு பூசிவர குணமடையும் .இதன் காய் களை வற்றலிட்டு சாப்பிட்டு வர குடற்புண்கள் தீரும். ஜீரணமாகும். கனிகள் நறுமணம் மிக்கது சுவை யானது.

வீழி இலைகளை அரைத்து சொறி, சிரங்கு, வீக்கம் இவைகளிற்கு பூச லாம் இந்த மூலிகையை விசிலி எனவும் குறிப்பிடுவர். வீழி இலை களை சுத்தம் பண்ணி நன் றாகக் கழுவி இலைகளைப் பட்டுப் போல அரைத்து வாதவலி, குடைச்சல் உள்ள மூட்டுக்களில் 5 நாட்கள் பற் றிட்டு வர வலி குடைச்சல் அகலும்.

## இன்று ஒரு தகவல் 155



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# விந்தைச் செடிகள்

பேராசிரியர் தங்ஸ்டன் என்று ஒருவர். இவர் ஒரு ஆங்கில அறிவியல் வல்லுநர். இவர் ஒரு தடவை ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அமெரிக்காவின் நடுப்பகுதியில் உள்ள காடு அது. அவருடன் அவருடைய நாயும் போய்க் கொண்டி ருந்தது. சிறிது நேரத்தில் திடீரென்று ஒரு அலறல் சத்தம் அது அவரது நாய்க்குட்டியினுடைய சத்தம் தான். பேராசிரியருக்கு ஒன்றுமே புரிய வில்லை.

எத்தத் திசையில் இருந்து சத்தம் வருகிறது என்று பார்த்தார். அந்தத் திசையிலே வேகமாக நடந்தார். அங்கே போய்ப் பார்த்தால் அவருக்குப் பெரிய அதிர்சசி ஒன்று காத்திருந்தது. என்ன தெரியுமா? ஒரு செடி அந்த நாய்க்குட்டியைக் கவ்விப் பிடித்துக் கெண்டிருந்தது. அந்தப் பிடியில் இருந்து தப்பிக்க முடியாமல் நாய்க்குட்டி அலறிக் கொண்டிருந்தது. அந்தச் செடி பார்க்க கறுப்பாக பசைத் தன்மை உள்ளதாக இருந்தது. அந்தச் செடியினுடைய உணர்வுக் கொடுக்குகள் தான் நாயைப் பிடித்துக் கொண்டிருந்தது. பேராசிரியர் மிகவும் கஷ்டப்பட்டு அந்தச் செடியிட மிருந்து நாயைப் பிரித்து எடுத்தார். அதற்குப் பின் சிறிது நேரம் கூட அங்கே நிற்கவில்லை. ஆராய்ச்சி செய்த வரைக்கும் போதும் என்று சொல்லித் திரும்ப வந்து விட்டார்.

பின்னர் விசாரித்த போது தான் தெரிந்தது அங்கே வாழுகின்ற காட்டு வாசிகள் தான் இது போன்ற செடிகளை ஆங்காங்கே வைத்திருக் கிறார்களாம். இந்தச் செடி விலங்குகளை மட்டும் தான் என்று இல்லை மனிதரையும் பிடிப்பதும் உண்டாம். இது ஒரு பேய்ச் செடிகள் என்று தான் சொல்ல வேண்டும். அதனால் தான் பேய்க்கண்ணி என்று வைத்திருக்கிறார்கள். அதாவது Devil Noose!.

பனிச்செடி என்று ஒன்று Sundew plant! Drossera என்று பெயர். ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேல்யா, தென்னாபிரிக்கா இங்கே எல்லாம் சதுப்பு நிலப்பகுதியில் இந்த வகைச் செடி அதிகமாக உள்ளது. இது என்ன செய்கின்றது என்றால் புழு பூச்சிகளை எல்லாம் பிடித்து உண்ணும். பூச்சி இலையில் உட்காரந்தால் போதும் அதில் உள்ள பசை நீரில் மாட்டிக் கொள்ளும். உடனே இலையில் இருக்கின்ற Teutacles. அதாவது உணர்ச்சிக் கொடுக்குகள் பூச்சியை கெட்டியாகப் பிடித்தி ருக்கும். பூச்சி துள்ளினால் மற்ற இலையும் கொடுக்கும் கெட்டியாக மூடிக்கொள்ளும். பூச்சியை சுத்தமாக சாப்பிடும் வரைக்கும் இலை பிரிவதே இல்லை.

துருத்திச்செடி என்று ஒன்று Bladder woot அதாவது Utricularia! இது ஒரு சன்னமான செடி. குளத்திலே மிதந்து கொண்டிருக்கும் இலையில் ஒரு பகுதி சிறிய பை மாதிரி இருக்கும். ஒவ்வெரு பைக்கும் ஒரு கதவு உண்டு. அது உட்புறமாக வளைந்து இருக்கும். பூச்சி உள்ளே போனால் அவ்வளவு தான் வெளியே வர முடியாது. பூச்சியைக் கொன்று அதனுடைய சாற்றை அருமையாக சாப்பிட்டு விடும் இந்தச் செடி.

அசாம் காடுகளில் ஒரு வகை செடி உண்டு Nepenthes அல்லது Pitcher plant என்று பெயர். தமிழில் தாழிச்செடி என்று சொல்லலாம். இதனுடைய இலை நிலக்கடலை மாதிரி ஒரு கூடு போல இருக்கும். அதிலும் ஒரு கதவு உண்டு. வாசனையில் மயங்கி பூச்சி உள்ளே போய்விடும். அவ்வளவு தான் உள்ளே செரிக்க வைப்பதற்கு செரிமான நீர் Digestive fluid தயாராக இருக்கும். அடுத்த வினாடி பூச்சி இறந்து விடும்.


இடுக்கிச்செடி என்று Diones என்று பெயர். இதனது இலை அழகாக இருக்கும். இலை ஓரம் பல் மாதிரி இருக்கும். பிணைப்பதற்கு வசதியாக இருக்கும். ஒவ்வொரு இலையின் நடுப்பகுதியிலும் ஆறு உணர்வு இழைகள் உண்டு. இதிலே ஏதாவது ஒரு இழையைத் தொட்டால் போதும் திடீரென்று இலை மூடிக் கொள்ளும். அவ்வளவு தான் பூச்சியைக் கொன்று சாப்பிட்டுவிடும்.

ஆபிரிக்காவிலே மணந்து கொல்லி என்று ஒரு செடி. Araugia albens வெள்ளைப் பூ பூக்கும். வாசனையாக இருக்கும். பூச்சி ஆசையாக உள்ளே போய் தேனைக் குடிப்தற்கு முயற்சி செய்யும். அதற்குள்ளே செடி பூச்சியை கொன்று சாப்பிட்டுவிடும். அவுஸ்திரேலியா விவசாயிகள் அவர்கள் பழத்தோட்டத்தில் இந்தச் செடியை பயிரிடு வார்கள். செடிகள் விலங்குகளைப் பிடிக்கின்றது. சரி மனிதனைப் பொறுத்தவரைக்கும் அவன் இன்னொரு மனிதரைப் பிடிப்பதற்கு எப்போதும் தயார். கொடுப்பதற்குத் தான் யோசிப்பானே தவிர பிடிப்பதற்கு யோசிக்கமாட்டான்.

ஒரு கஞ்சன் ஆற்று வெள்ளத்தில் போய்க்கொண்டிருந்தான். கரையில் இருந்த ஒருவன் அவனைக் காப்பாற்ற முயற்சி செய்தான். கஞ்சனைப் பார்த்து உன் கையைக் கொடு கையைக் கொடு என்று கத்தினான். அவன் கொடுக்கவில்லை. கஞ்சனுக்கு எதையும் கொடுத்துப் பழக்கம் இல்லை. அதனால் கையைக் கொடுப்பதற்கும் மனசு வரவில்லை. ஆற்றோட போய்க்கொண்டிருந்தான். கரையில் இருந்தவன் யோசித்து என் கையைப் பிடி கையைப் பிடி என்று சொன்னான். கஞ்சன் உடனே கப்பென்று பிடித்துக்கொண்டான். உடனே இவன் இழுத்துக் கரையிலே போட்டு விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இன்று புனித ஹஜ்ஜ் பெருநாள்



கலாபூஷணம் பரீட் இக்பால்

புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதி படைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதி படைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாக புனித ஹஜ்ஜை நிறைவேற்றியாக வேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண் முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம் வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம்ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றன.



ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேசளவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப்பெறுகிறது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள் கூட இவ்வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இணைவைப்போடு மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்து வந்தது. இது ஒரு வழிபாடு என்பதை விடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்றுகூடும் வியாபார சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு இணைவைப்பும் மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்றுகூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப்பெற்றது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு, எத்தனையோ காலங்களாக "இல்லையே தமக்கொரு பிள்ளை" என ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான, ஒப்பற்ற மனதையும், ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக்கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது. ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும்.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்து கொள்வதில் எந்தத் தவறுமில்லை. .

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும் மன சந்தோஷத்துடனும் உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்பட வேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புரிந்துணர்வுடன் உழ்ஹிய்யா கொடுப்போம் புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்.

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3144

வர்சிகா




விதுஷா




தனுஷ்கா




வானதி




திவ்யா




பவிதன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 509





இரத்த வெறி கொண்டிருந்த ஆதித்த கரிகாலன் அச்சமயம் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவில்லை தான். ஆனால் அதற்குப் பிறகு மூன்று வருடமாக அவர் எத்தகைய சித்திரவதையை அனுபவித்து வருகிறார் என்பதை நான் அறிவேன்."

"உமக்கு எப்படித் தெரியும், ஐயா? உம்மிடம் சொன்னாரா?"

"மூன்று வருடமாய் மனத்திலே வைத்துக் கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவருடைய உள்ளத்தை ஏதோ ஒரு துன்பம் அரித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் அறிந்திருந்தேன். பத்து நாளைக்கு முன்பு, நான் ஈழத்துக்குப் புறப்படடதற்கு முதல்நாள் தான், மனத்தைத் திறந்து என்னிடம் சொன்னார் அது முதல்"

"அது முதலாவது என்ன?"

"பழுவூர் இளைய ராணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என் மனத்திலும் குடிகொண்டு விட்டது!"

"ஆதித்த கரிகாலரின் நிலையில் நீர் இருந்திருந்தால் நான் கேட்டுக் கொண்டதற்காக வீரபாண்டியரை உயிரோடு விட்டிருப்பீர் என்று சொன்னது நினைவிருக்கிறதா?"

"நன்றாக நினைவிருக்கிறது."

"அது உண்மைதானா?"

" சத்தியம் தேவி! தாங்கள் சோதித்துப் பார்க்கலாம்."

"ஐயா! என் மனதில் ஒரு சந்தேகம் இருக்கிறது. அதைச் சொல்லட்டுமா?"

"தாங்கள் தங்கக் குரலில் எதைச் சொன்னாலும். என் செவிகள் இன்பம் அடையும். உள்ளம் பூரிக்கும்."

"நீர் என்னைச் சோதிப்பதற்காகவே இப்படிப் பேசுகிறீர்கள் என்று சந்தேகிக்கின்றேன். நான் விரிக்கும் மோக வலையைப் பற்றிப் பேசி, நீர் எனக்கு வலை விரிக்கப் பார்க்கிறீர். என்னுடைய அந்தரங்கத்தை அறிந்து கொள்ள முயல்கிறீர்."

பார்த்திபேந்திரன் திடுக்கிட்டுப் போனான். ஆரம்பத்தில் அவன் பேச ஆரம்பித்த போது அந்த எண்ணத்தோடு தான் ஆரம்பித்தான். பிறகு அதை மறந்து விட்டான். கபடமாக ஆரம்பித்த பேச்சு அவனை மோகக்கடலில் உண்மையாகவே தள்ளிவிட்டது. முதலில் அப்படி எண்ணியது குறித்து அவன் வெட்கப்பட்டான். அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "தேவி! அவ்விதம் தங்களை சோதித்து ஒற்றன் வேலை செய்ய நான் பிரயத்தனப்படும் பட்சத்தில் என் தலையில் இடி விழட்டும்!" என்றான். "ஐயோ! அப்படி சொல்லாதீர்கள்" என்று நந்தினி அலறினாள்.

"ஏன், தேவி! ஏன்?"

"உங்கள் பெரிய இளவரசரிடமிருந்து வந்தானே, இன்னொருவன், அவன் பெயர் என்ன?..."

"வந்தியத்தேவனா!"

"ஆம் அவன் தான் என்னிடம் மிகத் தந்திரமாக ஒற்று அறிந்து போக முயன்றான். தாங்கள் சொல்வதைப் பார்த்தால் அவன் தலையில் இடி விழுந்தே விட்டது போலிருக்கிறதே!"

"துரதிஷ்டவசமாக அவன் தலையில் இடி விழவில்லையே! அவன் நின்ற கப்பலில் அல்லவா விழுந்தது? அதனால் அவனுக்கு வந்த ஆபத்து, சின்ன இளவரசரையும் அல்லவா பிடித்து விட்டது?"

"பாவம்! பழையாறை இளைய பிராட்டியை நினைத்தால் எனக்குப் பரிதாபமாயிருக்கிறது. அவள் இந்த உலகில் மிகவும் பிரியம் வைத்திருந்த இருவர் ஏககாலத்தில் மாண்டு போனார்கள்! என்ன துரதிர்ஷ்டம்!"

"தேவி! இரண்டு பேர்கள் யார்?"

"நீர் சொன்ன இரண்டு பேருந்தான்! இளைய பிராட்டிக்குத் தம்பியின் மீது தனிவாஞ்சை உண்டு அல்லவா?"

"அது உலகம் அறிந்தது. அவருடைய பிரியத்துக்குப் பாத்திரமான இன்னொருவர்...?"


"ஏன் உங்கள் பெரிய இளவரசர் அனுப்பிய தூதன் தான்.."

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தங்கத் தூண்டில்



வசந்த், சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள். மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவர்களிடம் அவன், "சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகின்றன. ஏதேனும் உணவு தாருங்கள்!" என்று கெஞ்சினான், இரக்கப்பட்ட வசந்த் அவனுக்கு உணவு தந்தான்.

இதைப் பார்த்த சுந்தர், "அண்ணா! இப்படி சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக் கூடாது!" என்று எரிச்சலுடன் சொன்னான். அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். அவனுக்கு வசந்த் உணவு தந்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர்.

"சோம்பேறிப் பயலே! அடுத்த முறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன்!" என்று கத்தினான் சுந்தர். மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான் அவன்.

கோபத்தால் துடித்த சுந்தர் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான்.

அவனைத் தரதர வென்று இழுத்துக் கொண்டு ஏரிக்கரைக்கு வந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகமே என் தேசம், நன்மை செய்தலே என் கொள்கை
– தாமஸ் பெய்ன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எதைத்தான் தருவதற்கு நீங்கள் அனுமதிப்பீர்கள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு இன்னமும் வெளியிடப்படவில்லை. ஆயினும் 2024 ஆம் ஆண்டுக்குள் தேர்தலை நடத்தியாக வேண்டும் என்ற அடிப்படையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களில் தென்னிலங்கைக் கட்சிகள் களமிறங்கி உள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கைக் கட்சிகள் களமிறங்கியுள்ள போது, தமிழ்த் தரப்பின் நிலைப்பாடு என்னவென்ற கேள்வியும் எழவே செய்யும்.

இங்குதான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இருந்தும் அந்தக் கருத்து வலுவிழந்து போவதைக் காண முடியும். அப்படியானால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்பின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்பதுதான் இப்போது இருக்கின்ற வினா.

இங்குதான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் குறைந்தபட்ச இனவாதத்தைக் கொண்ட ஒருவரை ஆதரிப்பதுதான் ஒரே வழி என்ற நிலைமை உருவாகிறது.

இதை நாம் கூறும்போது, ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கருத்து இருக்கிறதல்லவா என்று உங்களில் சிலர் கூறலாம்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் சிந்தித்தாக வேண்டும். அதாவது ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதாயின், அதனை ஒட்டு மொத்தத் தமிழ் மக்களும் செய்தாக வேண்டும். ஆனால் அது ஒரு போதும் சாத்தியமாகாது.

ஆக, ஜனாதிபதித் தேர்தலில் தென்பகுதியைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பதுதான் தவிர்க்க முடியாத நிலைமை என்றாகிறது.

அதே நேரம் தமிழ் மக்களின் ஆதரவையும் பெறுவது அவசியமென்று சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒரு சிலர் நினைக்க இன்னொரு தரப்பு தனித்து சிங்கள மக்களின் வாக்குகளுடன் ஜனாதிபதிப் பதவியைப் பெற்றாக வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதும் தெரிகிறது.

இங்கு தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எதிர்ப்பிரசாரம் ஆரம்பமாகுவதைக் கண்டறிய முடியும்.

ஆம், 13வது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தி அதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என சஜித் பிரேமதாஷ கூறிவிட, அதனை எதிர்த்து தென்பகுதியில் ஆர்ப்பாட்டம் தொடங்கிவிட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் சூத்திரதாரிகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ள, தனித்து சிங்கள மக்களின் வாக்குப் பலத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற நினைக்கின்ற தரப்பு என்பது புரிதற்குரியது.

எதுவாயினும் இனிவரும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற கருத்தை தேர்தலுக்கு முன்பாகவே முன்வைத்து, அதனூடு எழுகைபெறும் இனவாதத் தீயைத் தணிய விடுகின்ற தந்திரோபாயங்களும் கையாளப்படும் என்பது நிதர்சனமான உண்மை.

எதுவாயினும் ஏற்கனவே இருக்கக்கூடிய 13 வது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதையே கடுமையாக எதிர்க்கின்ற சிங்களத் தரப்பு தமிழ் மக்களுக்கு என்ன தீர்வைத்தான் தரப்போகிறது என்பது தான் புரியாமல் உள்ளது.

# ஒக்டோபர் 5 ஜனாதிபதித் தேர்தல் தேர்தல்கள் ஆணையகம் மறுப்பு

எதிர்வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ வெளியிட்ட அறிவிப்பை தேர்தல் ஆணையத்தின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க முற்றாக மறுத்துள்ளார்.

தேர்தல்அட்டவணையை தயாரிக்க அமைச்சரவைக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ அதிகாரம் இல்லை என வலியுறுத்திய ரத்நாயக்க, "ஜூலை 17 முதல் தேர்தல் திகதியை தீர்மானிக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சுயாதீனமாகக் கூடுவார்கள்" என்று குறிப்பிட்டார்.

அமைச்சரவை அல்லது ஜனாதிபதி உட்பட எந்தவொரு வெளி நிறுவனத்திடமிருந்தும் அனுமதி பெறாமல் நாங்கள் திகதியை பகிரங்கமாக அறிவிப்போம்.

செப்டம்பர் 17 ஆம் திகதிக்குப் பின்னரே தேர்தல் நடைமுறைகளை ஆரம்பிக்க முடியும் என்றும், அதனைத் தொடர்ந்து நான்கு முதல் ஆறு வாரங்கள் வரையான தயாரிப்புக் காலம் கட்டாயமாக இருக்க வேண்டும் என்றும் விளக்கினார்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் 17-21 நாட்களுக்குள் வேட்புமனு தாக்கல் திகதி நிர்ணயிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ம-7,10)

## தியாகம், நல்லிணக்கத்துடன் வாழப் பழகிக் கொள்ளுங்கள்

### ஹஜ் வாழ்த்தில் ஜனாதிபதி ரணில்

உலகம் முழுவதிலுமிருந்து முஸ்லிம்கள் அனைவரும் ஒரே நோக்கத்துடன் ஒரே புனிதத் தலத்தில் கூடி, மனிதகுலத்தின் எதிர்பார்ப்பான சமூகத்தின் ஒருமைப்பாட்டிற்காக பிரார்த்தனை செய்கிறார்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கையில்,

ஆனமீக மற்றும் உலக வெற்றியை அடைய, மனிதன் சுயநலத்தை விட்டொழித்து, தியாகம் மற்றும் நல்லிணக்கத்துடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

அத்துடன் உலக மக்கள் அனைவருக்கும் சமத்துவம் மற்றும் சகோதரத்துவ உணர்வுகளை விதைக்கும் ஹஜ் கொண்டாட்டம், உலக அமைதிக்கான சிறந்த செய்தியையும் தரும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

மனித குலத்தின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக அனைவரும் ஒரே இலக்கில் ஒன்றுபடும் ஹஜ்ஜுப் பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு இலங்கை மற்றும் உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

எழுத்தாளர் தீபச்செல்வனிடம்

## பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் தீவிர விசாரணை

(கிளிநொச்சி)

ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய "பயங்கரவாதி" நாவல், விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நோக்கில் எழுதப்பட்டதா என்பதை ஆராயும் நோக்கில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு தீவிர விசாரணையை முன்னெடுத்துள்ளது.

கிளிநொச்சி பரந்தனில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவில் நேற்று தீபச்செல்வனிடம் இரண்டு மணி நேர விசாரணை இடம்பெற்றது. தீபச்செல்வன் எழுதியுள்ள பயங்கரவாதி நாவல் தொடர்பில் பல கேள்விகளை இதன் போது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு எழுப்பியுள்ளது.

நாவலில் இடம்பெறும் மாறன் என்ற கதாபாத்திரம் யார்? இப்போது எங்கே உள்ளார்? என்றும் நாவலில் இடம்பெறும் இராணுவக் கதாபாத்திரங்கள் யாரைக் குறித்துள்ளன என்றும் கேட்கப்பட்டதாக தீபச்செல்வன் தெரிவித்தார். அனைத்து கதாபாத்திரங்களும் கற்பனையானவை என்று தாம் பதில் அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த நாவலில் விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் கருத்துக்கள் உள்ளனவா என்றும் விசாரணை செய்யப்பட்டது. அப்படியான கருத்துகள் நாவலில் இல்லை என்றும் கடந்த காலத்தில் நடந்த விடயங்களையே நாவல் பேசுவதாகவும் தீபச்செல்வன் பதில் அளித்துள்ளார். (ம-7,10)

## இந்தியா சுற்றுலாவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் கடந்த 13ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியாவில் இருந்து 12,144 பேர் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர்.

அத்துடன் பிரித்தானியாவில் இருந்து 3,475பேரும், சீனாவில் இருந்து 3,095 பேரும், அவுஸ்திரேலியாவில் இருந்து 2,272 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7,10)

களுத்துறையில் இசை நிகழ்ச்சியில்

## இளைஞன் கழுத்து அறுத்து படுகொலை

(களுத்துறை)

களுத்துறைப் பகுதியில் இசை நிகழ்ச்சியின் போது இளைஞர் ஒருவர் கழுத்தை அறுத்து கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் தொடங்கொட, ஜன் உதான கிராமத்தைச் சேர்ந்த 20 வயதான மெனுர நிம்தர வணிகசேகர என்ற இளைஞனே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையை செய்த சந்தேக நபர் மனைவியை விட்டு சில நாட்களுக்கு முன்பு பிரிந்து தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் களுத்துறை [illegible] பிரதேசத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்வையிட குறித்த நபரின் மனைவி வந்ததாகவும், அங்கு அவருடன் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த இளைஞர் ஒருவருடன் நடனமாடியதாகவும் தெரியவருகின்றது.

இதைக் கண்ட சந்தேக நபர் கூரிய ஆயுதத்தால் நடனமாடிக்கொண்டிருந்த இளைஞனின் கழுத்தை அறுத்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு [illegible] (ம-7,10)

கடந்த 6 மாதங்களில்

## 600 கிலோ போதைப்பொருள் கடற்படையால் மீட்பு

(கொழும்பு)

கடந்த 6 மாத காலப் பகுதி வரையில் 600 கிலோ கிராம் போதைப் பொருளை கைப்பற்றியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

9,460 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

நெடுநாள் படகில் சூட்சுமமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3,250 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 131 கிலோ ஹெரோயின்போதைப் பொருளுடன், 06 சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் போதைப்பொருளை காண்காணிப்பதற்காக காலி துறைமுகத்திற்கு வருகை தந்திருந்த போதே கடற்படை தளபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

16

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இப்பூச்சி, காற்றின் வழியாகப் பரவியதனால், அதன் அழிவை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தல் முடியாமற்போயிற்று. அப்பூச்சியினால் ஏற்பட்ட நோயின் மர்மம் பதின்மூன்று வருடங்களுக்குப் பின்னரே பூரணமாகக்கண்டு பிடிக்கப்பட்டது.

கோப்பிச்செடிகளில் நோய் தென்பட ஆரம்பித்த முதல் ஆண்டுகளில், விளைச்சலில் ஏற்பட்ட சொற்ப வீழ்ச்சி பருவ மாற்றங்களினால் ஏற்பட்டதென்றே தோட்ட முதலாளிகள் முடிவு கட்டினர். அதே காலத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கோப்பியின் விலைகள் ஐம்பது விகிதமாக அதிகரித்ததனால் வருவாய் முன்பிலும் பார்க்க மேலானதாகக் காணப்பட்டது.

இவ்விதமாக நோய் காலத்தில் கோப்பிக்கு நல்ல விலை கிடைத்தபடியினால் பயிர் மாற்றமொன்றும் நிகழவில்லை. வீழ்ச்சியடைந்த விளைச்சலை ஈடு செய்யப் புது நிலங்கள் அதன் செய்கைக்குத் திறக்கப்பட்டன. 1869 இற்கும் 1879 இற்குமிடையில் நான்கு இலட்சம் ஏக்கர் முடிக்குரிய நிலங்கள் விற்பனையாயின.

1880 தொடக்கம், கோப்பியின் விலைகள் வீழ்ச்சியடைய ஆரம்பித்த பொழுதுதான், நோயினால் ஏற்பட்ட அழிவின் கனம் மெல்ல மெல்லப் புலனாயிற்று. 1870 இல் ஒரு அந்தர் கோப்பியின் விலை 54 ரூபாயாக இருந்தது. 1879இல் ஒரு அந்தர் கோப்பியின் விலை 107 ரூபாவாக அதிகரித்து காணப்பட்டது.

1878 அளவில் கோப்பியின் எதிர்காலத்தைப்பற்றி தோட்ட முதலாளிகள் பீதியடைந்த போதிலும், அது ஈற்றில் புத்துயிர் பெற்று பழைய நிலையை அடையும் என்று அவர்கள் பூரணமாக நம்பியிருந்தனர். 1880 தொடக்கம் இந்த நம்பிக்கை படிப்படியாக மறைந்தது. உற்பத்தியும் விலைகளும் குறையவே, தோட்டமுதலாளிகள் கோப்பிச் செய்கையை கைவிடத் தொடங்கினர்.

1883 இல் ஏற்றுமதி 305,702 அந்தர் என்ற அதிகுறைந்த நிலையை எய்தியது. முதலாளிகள் தமது தோட்டங்களை விற்க முயன்றனர். ஆனால் அவற்றை வாங்குவதற்கு ஆட்களில்லை. இலங்கையிலிருந்த ஐரோப்பிய துரைமார்களில் நான்கிலொருபகுதியினர் நாட்டைவிட்டு வெளியேறினர்.

1887 இல் கோப்பி பயிரிடப்பட்ட நிலம் 100,000 ஏக்கராகவும் 1895 இல் 22,500 ஏக்கராகவும் குறைந்தது. 1905 இல் கோப்பி பயிரிடப்பட்ட நிலத்தின் பரப்பு 3,591 ஏக்கராயிற்று.

### சிங்கோனா

மலேரியா நோய்க்கு பயன்படுத்தப்படும் குயினைன் மாத்திரை தயாரிப்பதற்கு ஆதாரமான சிங்கோனா நடுகை, கோப்பி லாபகரமானதாக இருக்கும் வரை புறக்கணிக்கப்பட்டது. ஆனால் அதுவே கோப்பி வீழ்ச்சியுறத்தொடங்கிய காலத்தில் உயிர்காக்கும் படகைப் போல் சிறிது காலம் கைகொடுத்தது.

இலங்கையில் கோப்பித் தோட்டங்கள் நோயினால் அழிந்தொழிந்து போன காலத்தில், அதனிடமாக சிங்கோனவையும் பின்னர் தேயிலையையும் மாற்றுப் பயிர்களாகச் செய்யக் கூடிய வழியைக்காட்டியவர் பேராதெனிய தாவரத் தோட்டத்தின் இயக்குநரான கலாநிதி துவைட்ஸ் ஆவர்.

ஒரு பயிரை மாத்திரம் எல்லாத் தோட்டங்களிலும் பயிரிடுவதில் மறைந்திருந்த அபாயத்தைத் தோட்டத் துரைமாருக்கு எடுத்துக் காட்டியதுமன்றி அவர்களது அவதானத்தை சிங்கோனாவிலும் தேயிலையிலும் செலுத்துவதற்காக அயராது உழைத்தார். ஆள்பதி சேர். வில்லியம் கிரகறியும் (1872-1877) இத்தகைய எச்சரிக்கைகளை விடுத்தார்.

ஆனால் கோப்பியினின்று இன்னும் பெரும் இலாபமீட்டிய பெருந்தோட்டக்காரர், அவர்களது ஆலோசனைகளுக்குச் செவி சாய்க்க மறுத்தனர்.

சிங்கோனாவைக் கோப்பியுடன் துணைப்பயிராகப் பயிரிடும் முறை முற்றிலும் கலாநிதி துவைட்சின் முயற்சியினலேயே ஏற்பட்டது. அவர் 1861 இல் ஹக்கலையில் ஒரு சிறு சிங்கோனாத் தோட்டத்தை ஏற்படுத்தினர். 1870 க்குப் பின் கிரகறி காட்டிய ஊக்கத்தினால் தோட்டக்காரர் சிலர், புதுப்பயிரைச் செய்ய ஆரம்பித்தனர்.

அவர்களும் உடனடியாக நல்ல இலாபத்தைப் பெற்றனர். ஏனெனில் இலங்கைச் சிங்கோனா, இந்தியப் பொருளிலும் பார்க்க தரம் நல்லதாகக் காணப்பட்டதனால் இலண்டனில் நல்ல விலை கிடைத்தது. கோப்பியின் வீழ்ச்சியில் பீதியடைந்த தோட்டமுதலாளிகள் யாவரும், சிங்கோனாவைப் பயிரிடுவதில் முனைந்தனர். இதன் பயனாக 1875 இல் 5000 ஏக்கர் நிலம் இப்பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டது.

இதற்கெனப் புதிய நிலங்கள் திறக்கப்படாவிடினும் 3000 அடிக்கு மேற்பட்ட உயரத்திலுள்ள தோட்டங்களில் சிங்கோனா மரங்கள் கோப்பிக் கிடையே நாட்டப்பட்டன.

1878க்கும் 1883க்கும் இடையில், சிங்கோனாப் பயிர்ச் செய்கை துரிதமாக முன்னேறியது. கலாநிதி துவைற்ஸ் சிங்கோனாக் கன்றுகளை விநியோகித்தும், அதனைப் பயிரிடும் முறைகளைக் காட்டிக் கொடுத்தும், புதுப்பயிரைப் பரப்புவதில் அளப்பரிய சேவை புரிந்தார்.

சிங்கோனாவிலிருந்து பெறப்பட்ட இலாபம், கோப்பிச் செய்கையின் வீழ்ச்சிக்கும் தேயிலையின் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தின் வெற்றிடத்தை நிரப்ப உதவியது.

சிங்கோனா ஒரு மருந்துப் பொருளாதலினால், அதன் கிராக்கி நெகிழ்ச்சியற்றது. எனவே அளவுக்கு மிகுந்த உற்பத்தி, நாளடைவில் பெரும் நட்டத்தையே கொணர்ந்தது. இலங்கையின் மிதமிஞ்சிய உற்பத்தியின் பயனாகவும், ஜாவாவிலும் பிறநாடுகளிலுமிருந்து ஏற்றுமதியான சரக்கின் காரணமாகவும் உற்பத்தி தேவையை மீறியது.

1885 முதல் விலை துரிதமாக வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. அவ்வாண்டு தொடக்கம் பெரும் தோட்டக்காரர் அப்பயிர்ச் செய்கையைக் கைவிட்டனர். அதன் பின்பு ஏற்றுமதியான சிங்கோனா கைவிடப்பட்ட நிலங்களினின்றே சேகரிக்கப்பட்டது. தேயிலை மென்மேலும் கூடுதலாகப் பயிரிட ஆரம்பிக்கப்பட்டது. 1900 அளவில் சிங்கோனா ஒரு மிகவும் சிறிய பயிர்த் தொழிலாக மாறிற்று.

### தேயிலையின் விருத்தி:

கோப்பியின் வீழ்ச்சிக்கு முன், மலைப்பிரதேசத்தில் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்ட பயிர்களுள் தேயிலையும் ஒன்று. 1839 இல் சில தேயிலைச் செடிகள், அசாமிலிருந்து பரீட்சைகள் நடாத்தும் பொருட்டு இங்கு கொண்டுவரப்பட்டு, பேராதனைப் பூந்தோட்டத்தில் நாட்டப்பட்டன.

1841 ஆம் ஆண்டு வேம்ஸ் சகோதரர்கள் (Worms Brothers) தேயிலையை முதன் முதலாக இறம்பொடையில் சிறு தோட்டமொன்றில் நாட்டினர். சிறு நிலத்தில் பயிரிடப்பட்ட இப்பயிர், அதிக பணச் செலவை உண்டுபடுத்தியதனால் அது இந் நாட்டுக்குப் பொருந்தாதென அவர்கள் முடிவு கட்டினர்.

1867 இல் ஜேம்ஸ் ரெயிலர் (James Taylor) அதனை ஒரு பயன்தரு தொழிலாக மாற்றிய மைக்கலாமென்பதைச் செய்கை மூலம் நிரூபித்து "தேயிலைத் தொழிலின் தந்தை" எனும் சிறப்புப் பெயரைப் பெற்றார். இவரது முன்மாதிரியினாலும் இந்தியத் தேயிலைத் தொழிலின் விரிவினாலும் அப்பயிர்ச் செய்கையில் புது ஆர்வம் பிறந்தது.

கோப்பித் தோட்டங்களை நோய் பீடித்த பொழுது, தேயிலை பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் அளவு 200 ஏக்கராகும். கோப்பியின் விளைச்சல் வீதம் வீழ்ச்சியுறத் தொடங்கத் தேயிலையில் ஆர்வம் அதிகரித்தது. கோப்பி முதலாளிகள் பணமுடைப்பட்டாலும் உற்சாகம் குன்றவில்லை. அவர்கள், கோப்பிச் செடிகள் பாழாகக் கிடந்த தரிசு நிலங்களில் தேயிலையைப் பயிரிடலாமெனக் கண்டனர்.

எனினும் நீண்டகால அனுபவம் பெற்ற ஒரு பயிரை விடுத்து இன்னொரு புதுப்பயிரைப் பயிரிடுவதில் பல இடர்பாடுகள் இருந்தன. தேயிலையை ஆரம்பம் தொட்டு விஞ்ஞான அடிப்படையில் நிருவகிக்க வேண்டியதாயிற்று. ஏனெனில் தேயிலையைப் பதனிட்டுத் தயாரிக்கும் முறை, கோப்பி விதைகளை உலரவிடும் முறையினின்று சிக்கல்கள் மிகுந்தது.

இதற்கு தொழிற்சாலைகளும் விலைமிகுந்த இயந்திர சாதனங்களும் தேவைப்பட்டன. இவ்வியந்திரங்களை இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்ய நிறைந்த முதல் வேண்டப்பட்டது. இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கொருமுறை தேயிலைக் கொழுந்தைப் பறிக்கவும் செடிகளை ஒழுங்காகக் கண்காணிக்கவும் ஏராளமான கூலியாட்கள் தேவைப்பட்டனர்.

இதற்கு, மேலும் முதல் தேவைப்பட்டது. இதனால் தேயிலைத் தோட்டங்களைத் திறந்தவர்கள் யாவரும் ஐரோப்பியராகவே இருந்தனர். முதலுடைய ஆங்கிலேயர், இலங்கை வந்து பழைய கோப்பித் தோட்டங்களைச் சொற்ப விலைக்கு வாங்கி அல்லது முடிக்குரிய நிலங்களை வாங்கி, துப்பரவு செய்து தேயிலை விதைகளை நாட்டினர்.

சிறு முதலுடையோர் சிங்கோனாப் பயிரைத் தம் தோட்டங்களில் விளைவித்தனர். தேயிலை விதைகளைப் போதிய அளவில் அசாமிலிருந்து பெறமுடியாமற் போனதாலும் பலர் சிங்கோனாவைப் பயிரிட முற்பட்டனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

பொருள் நிரப்பும்போது திடீரென மோட்டார் சைக்கிள் தீப்பற்றிய சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு வந்த நபர் கையடக்கத் தொலைபேசியில் உரையாடியவாறு மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்பியபோதே குறித்த சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது துரிதமாக செயற்பட்ட எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இது தொடர்பிலான சிசிரிவி காணொளி வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ம-7,10,100)

## சிறுவர்களிடை...

கள் சிறுவர்கள் மத்தியில் காணப்படுமாயின் முறையான மருத்துவ சிகிச்சையைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இன்ஃபுளுவென்சா வைரஸ் எளிதில் பரவும் திறன் கொண்டதால் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கை பின்பற்ற வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7,10)

மஹஜன சம்பத
திகதி 2024.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 5506
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 3 5 8 7 0 9
அத சம்பத Y 8 7 0 9
சீட்டிழுப்பு இலக்கம் 81
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1536
Q 20 27 40 41 Q
Double Chance 73180

மெகா பவர்
திகதி 16/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1854
X 03 04 07 14 78
Double Chance 26294

லக்கி 7 VIP
திகதி 2024.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 0332
L 0 2 3 5 8 3 L

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3748
சீட்டிழுப்பு திகதி 16.06.2024
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 26 31 34 36
O 92320
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 0815
சிம்மம் 19 23 29 44 சிம்மம்
49144 10

## சமஷ்டி...

சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள தேர்தல்கள் தொடர்பில் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 17இற்கும், ஒக்ரோபர் 16இற்கும் இடையில் நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னமும் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவிக்கவில்லை. சஜித் பிரேமதாஸவும், அநுர குமார திசாநாயக்கவும் தாங்கள் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்கள்.

தேர்தல் அறிவிக்கப்பட்டு, போட்டியிடுகின்ற பிரதான வேட்பாளர்கள் தங்களுடைய நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியதன் பின்னர்தான் நாம் உறுதியான முடிவொன்றுக்கு வரமுடியும். தற்போது அனைத்துக் கருமங்களையும் அவதானத்தில் கொண்டுள்ளோம்.

சுயநிர்ணயம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாக எவ்விதமான விடயங்களையும் கருமங்களையும் முன்வைக்கப் போகின்றார்கள் என்பதை தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் இவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே அவர்கள் உள்ளக சுயநிர்ணயத்துக்கு உரித்துடையவர்கள். இதனடிப்படையில் பிரிக்க முடியாத, பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய அடிப்படையில் இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்சமான அளவில் அதிகாரங்கள் பகிரப்பட்டு அவை மீளப் பெறப்படாத வகையில் உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்த விடயத்தினை தலைவர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் வெளிப்படுத்த வேண்டும். அதுமட்டுமன்றி தென்னிலங்கை சிங்கள மக்களிடத்திலும் அந்த விடயத்தினை முன்வைத்து தெளிவுபடுத்த வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## பசுமை ஆற்றலை...

வறண்ட பகுதிகளில் குறைந்த மழைப்பொழிவை அனுபவிக்கும் அதே வேளையில் ஈரமான பகுதிகளில் அதிக மழை பெய்யும் என்று கணிக்கப் பட்டுள்ளது

அதற்கமைய மாறிவரும் உலகிற்கு ஏற்ற வகையில் பொருளாதார, சமூக, கல்வி மற்றும் விவசாயத்துறையில் புதிய மாற்றத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மூன்று தசாப்த கால யுத்தத்திற்கு முகம் கொடுத்த மன்னார் மாவட்டம் இன்று புனரமைக்கப்படுகிறது. இம் மாவட்டத்தின் விரிவான அபிவிருத்தி மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்க முடியும். இம்மாவட்டத்தில் சுற்றுலாத் தொழில், மீன்பிடித் தொழில் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

இப்பகுதிகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின் உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகம். காற்றாலை மின் உற்பத்தி செய்து இந்தியாவுக்கு விற்கும் முறை குறித்து இந்திய அரசுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

வடமாகாணமானது பசுமை ஆற்றலை உற்பத்தி செய்வதில் விசேட ஆற்றலைக் கொண்டுள்ளது.

ஏரிகள் மற்றும் காற்றாலைகளில் சோலார் பேனல் மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதன் மூலம் அதிக அளவில் மின் உற்பத்தி செய்ய முடியும்.

அந்த சக்தியை இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் விற்பனை செய்வதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்க முடியும். பசுமை ஆற்றல் மற்றும் பச்சை ஹைட்ரஜன் ஆகியவை பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

மன்னாரில் நிர்மாணிக்கப்படும் புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு தேவையான நிதி எதிர்வரும் காலங்களில் வழங்கப்படும். புத்தளம் ஊடாக மன்னாருக்கான வீதி திறப்பது தொடர்பில் எதிர்காலத்தில் கலந்துரையாடி பதில் வழங்க முடியும்.

மன்னார் வைத்தியசாலைக்கு CT ஸ்கான் இயந்திரம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன விவசாயத்தை உருவாக்குவதற்கான முறையான திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

அதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அபிவிருத்திக்குழுவைக் கூட்டி கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்குமாறு தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பிரதேசத்தில் உள்ள ஏரிகளை பாதுகாப்பதற்கும் மல்வத்து ஓயா திட்டத்தில் இருந்து மன்னாருக்கு வரும் நீரைப் பாதுகாப்பதற்கான முறையான வேலைத்திட்டம் தேவை.

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள காவலரண்களை ஒரே நேரத்தில் அகற்ற முடியாது. பாதுகாப்புப் படையினருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பேன் என நம்புகிறேன்.

மன்னார் மாவட்டத்திற்கு தேவையான அபிவிருத் திகளை வழங்குவோம். இந்த ஆண்டு அதற்கான அடிப்படை அடித்தளம் அமைக்கப்படும்.

இப்பிரதேசத்தில் விரிவான அபிவிருத்திகளை மேற்கொண்டு நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் மாவட்டமாக மன்னார் மாவட்டத்தை உருவாக்குவோம் என்றார். (ம-7,10)

லங்கா மஹறால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(1175)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.06.2024 வெற்றி வாரம் 214 வர்ணம் பழுப்பு
ஆங்கில எழுத்து N மற்றும் வெற்றி இலக்கம் 5 7 5 8 4 6
36111
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,104,852.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2480 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 16.06.2024 தினம் ஞாயிறு
31 33 53 76 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,760,687.20
DLB

சனிதா
2024.06.16 வெற்றி வாரம் 4641
12 26 32 39 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,870,877.60
ரூ.100,000/- 49535
DLB

சசிரி
வெற்றி வாரம் 490
2024.06.16
05 43 48
கபிலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,110,400/-
DLB

சீட்டிழுப்பு வாரம் 4192
சீட்டிழுப்பு திகதி 2024.06.16 தினம் ஞாயிற்றுக்கிழமை
04 25 32 52 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,582,147.60
255903
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 25 11 23 65 74
சுப்பர் இலக்கம்
1656 மஞ்சள் 16.06.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 528,048,715.00
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2306
சீட்டிழுப்பு திகதி : 2024.06.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 120,668,243.20
17 20 30 44 Y
125192
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் ஊடகவியலாளர் வீடு தாக்கப்பட்டு மூன்று தினங்களாகியும்

## இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை

## சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழில் ஊடகவியலாளரின் வீடு தாக்குதலுக்குள்ளாகி மூன்று தினங்களாகியும் இதுவரை எவரையும் பொலிஸார் கைது செய்ய வில்லை என குற்றஞ்சாட்டிய பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், குறித்த தாக்குதலின் பின்னணியில் இராணுவத்தின் மறைகரங்கள் உள்ளதென தெரிவித்தார்.

அச்சுவேலியில் தாக்குதலுக் குள்ளான ஊடகவியலாளரின் இல்லத்தை நேற்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், நீண்டகாலத்திற்கு பின்னர் ஊடக வியலாளரை இலக்கு வைத்து குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் கடந்த 13 ம் திகதி நடைபெற்று இன்றுடன் (நேற்றுடன்) மூன்று நாள்களாகியும் இதுவரை யாரும் கைது செய்யப் படவில்லை. யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸார் ஆகியோர் தேடுகிறோம் பிடிக்கி றோம் என்கிறார்கள். எதுவும் நடப்பதாக இல்லை.

இதே ஜனாதிபதியை பற்றியோ அரச உயர் அதிகாரிகள் பற்றியோ யாராவது பதிவு போட்டால் ஒரு சில மணிநேரங்களில் கைது செய்யப்படுவார்.

யாழ் மாவட்டத்தில் மூலைக்கு மூலை இராணுவம், கடற்படை, விமானப்படை பொலிஸார் குவிக்கப்பட்டு இருக்கும்போது எவ்வாறு இவர்களுக்கு தெரியாமல் மோட்டார் சைக்கிள்களில் துணிகரமாக வாள்கள் பொல்லுகளுடன் வரமுடிகிறது.

வீட்டுக்கு வெளியே நின்ற பேருந்து, முச்சக்கரவண்டியை தாண்டி ஊடகவியலாளரின் மோட்டார் சைக்கிளை இனங் கண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த விடயத்தை திசைதிருப்புவதற்காக திருநங்கைகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நாட்டின் ஜனாதிபதி பலாலி வசாவிளான் பகுதியில் காணி துண்டு விடுவிப்புக்காக வந்த போது, காணி விடுவிக்கப்பட வில்லை மக்கள் கூடியநிலையில் அது தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற த.பிரதீபன், க.பரதன் ஆகிய இரண்டு ஊடக வியலாளர்களும் இராணுவத்தி னரால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகப்பட்டு இராணுவப் புலனாய்வாளர்களால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் திறந்தவெளி சிறைச்சாலைக்குள் அடக்குமுறைகளை விரிவுபடுத்திபிரயோகிப் பதையே இதன்மூலம் பார்க்க முடிகிறது. இதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் என்றார். (ம-7,10,33)

# கட்டுமானப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சி

## கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

சீமெந்து, கம்பி உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்து வருவதால், கட்டுமானப் பணிகளை மீண்டும் தொடங்குமாறு தேசிய கட்டுமானத் தொழிலாளர் சங்கம், பொதுமக்களிடம் கோரியுள்ளது.

அந்த வகையில், கடந்த காலத்தில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியுடன், ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் பல காரணிகளால் கட்டுமானத் துறையின் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்திருந்தன.

எவ்வாறாயினும், பொருளாதாரம் மீட்சியடைந்துள்ள நிலையில், தற்போது அவற்றின் விலையில் வீழ்ச்சி காணப்படுவதாக தேசிய கட்டுமான தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த தேசிய கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகர கடந்த காலத்தில் கட்டுமானத் துறை முற்றிலும் சரிந்திருந்தது. இன்று, இத் துறையில் ஓரளவு மீட்சி ஏற்பட்டுள்ளது.

சீமெந்து, இரும்பு, நிறப்பூச்சு போன்ற மூலப்பொருட்களின் விலைகள் ஓரளவுக்கு குறைந் துள்ளது. மொத்தத்தில் வங்கி வட்டி குறைந்துள்ளதால் மகிழ்ச்சி அடையலாம். எமது வாடிக்கையாளர்கள் வங்கிக் கடனை பெற்று வீடு கட்டும் சூழல் ஓரளவுக்கு ஏற்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

# நாட்டில் எரிபொருட்களின் விலைகளை குறைப்பது கடினம்

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடைந்துள்ள போதிலும், நாட்டில் எரி பொருட்களின் விலைகளை, உடனடியாக குறைப்பது கடினமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளின் பிரகாரம், இலங்கையில் எரிபொருள் விலை குறைப்பு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டுமென அதன் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.


சிங்கப்பூர் வர்த்தகக் குறியீட்டின்படி சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது.

இதன்படி, அங்கு தீர்மானிக் கப்படும் விலைகளுக்கு அமைய இலங்கையில் எரிபொருள் விநியோகிக்கப்பட வேண்டுமெனவும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் மொத்தத் தேவையில் சுமார் 35 வீதமான மசகு எணணெய் இறக்குமதி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்படுவதால், உலக சந்தை விலைகளுக்கு அமைவாக சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ள முடியாதெனவும் சுலக்ஷன ஜயவர்தன கூறினார். எவ்வாறாயினும், கடந்த செப்டம்பர் மாதத் துடன் ஒப்பிடுகையில் மசகு எண்ணெய் விலை 27 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது, பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டம்பரில் ப்ரெண்ட் சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 94 அமெரிக்க டொலராக காணப்பட்டது. தற்போது 74 டொலராக குறைவடைந்துள்ளதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ம)


## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 04 . 1947



மறைவு 17 . 06 . 2014

### அமரர் சிற்றம்பலம் சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை)

திதி - [26.06.2024]

ஐயிரண்டு ஆண்டுகள்
நீவிரின்றி சென்றதுவோ!
வையகத்தில் நம் வாழ்வு
நயமிழந்து போனதுவோ!
தசாப்தம் ஒன்று முடிந்திடினும் – உங்கள்
சகாப்த வாழ்வு தொடர்ந்திருக்கும்!
நிலம் வியக்க இங்கு
நிறை வாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும்
ஆறாது எம் துயரம்
இந்த நிலம் இருக்கும் வரை
உங்கள் நினைவிருக்கும்.

(1250)

வரணி. குடும்பத்தினர்

## வேலையாட்கள் தேவை

ஊடக நிறுவனம் ஒன்றிற்கு Video editing தெரிந்த வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு

076 126 6682

(1253)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: • கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-0909)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0909)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1252)

Golden Real Estate (pvt) Ltd
077 029 4164,
077 329 4130, 077 294 1521


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.[illegible], பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org